தம்பி! தயார்! தயார்!!-(C.N.A)

திராவிடநாடு

29—1—56 ★ 14 வார வெளியீடு 30 ★ விலை 2 அணா

பிப்ரவரி 20

★

எழுவோம்!
எல்லை காக்க!!

★

நாடெங்கும்
கண்டிப்போம்

★

உரிமை பெற
ஒன்று சேர்வோம்!

★

பிப்ரவரி 20

கேட்டீரா, சேதியை!

சிங்கத்தின் பங்கம்!

நேரு பண்டிதரின் படத்தை அப்புறப்படுத்து!

பண்டிதரின் படம் நமது கூடத்தில் இருப்பது, நமக்கே அவமானம்.

நமது உரிமைகளை அழித்திடும் சர்வாதிகாரியின் படம், நமது நகராட்சி மன்றத்திலே இனியும் இருக்கக்கூடாது!!

உடனே அப்புறப்படுத்துக!

இல்லையேல், உள்ளே நுழைவோம், நாங்களே அந்தப் படத்தை அப்புறப்படுத்துவோம்.

உரிமையைக் கேட்பவர்களைச் சுட்டுத்தள்ளுகிறார்—இவருடைய படத்தையா நமது மன்றத்திலே மாட்டிவைப்பது?

தன்மானம் இல்லையா! எட்டி உதைப்பவனின் காலுக்கு முத்தமிடுவதா!!—செச்சே! எப்படி மனம் ஒப்பும், உடனே பண்டிதரின் படத்தை அப்புறப்படுத்துங்கள்! எமது ஆத்திரம் அதிகமாவதற்குள் அப்புறப்படுத்துங்கள்! ஆத்திரம் கொண்டோருக்குச் சாத்திரம் இல்லை, அறிந்திடுக!!

நமது வீதிகளிலே இரத்தம், வீடுகளிலே அழுகுரல்! ஊரிலே பிணம்! —'ஜாலியன் வாலா' நடத்துகிறார் பண்டிதர், இவர் படம் நமது மன்றத்தில் இருக்கலாமா?? உடனே அப்புறப்படுத்துங்கள்.

பெண்கள் முழக்கமிட்டனர் இதுபோல!!

பெண்களின் அணிவகுப்பு கிளம்பிற்று, நகராட்சி மன்றத்தை நோக்கி. உள்ளே நேருவின் படம் இருக்கிறது தெரியும் அவர்களுக்கு; அந்தப் படம் அங்கே இருப்பது மக்களுக்கே பெருத்த அவமானம் என்று எண்ணினர், மாதர்கள்.

போலீஸ் ரோந்து வருகிறது—தெரியும் அவர்களுக்கு,

புதுப்புது போலீஸ்படை, ஆயுதம் தாங்கிக்கொண்டு 'பவனி' வருகிறது பயமூட்ட! பார்த்தனர்!!

பட்டாளம், தயாராக நிற்கிறது—உத்தரவு கிடைத்ததும் ஊர் மக்களைச் சுட்டுக் கொல்ல! அதுவும் தெரியும் சுடுவார்கள்—சுடுகிறார்கள் — உயிர் போகும்—கண்ணெதிரே நடக்கிறது கொடுமை, கோரம்! எனினும் அஞ்சா நெஞ்சுடன், அணிவகுத்துச் செல்கிறார்கள் பெண்கள், நேரு படத்தை நீக்கிவிடு! அவமானச் சின்னத்தை அகற்றிவிடு! மக்களின் துரோகிக்கு மதிப்பு அளிக்கமாட்டோம்! என்று முழக்கமிட்டபடி, நடைபோடுகிறார்கள்.

நேருவின் தரிசனத்துக்காக உச்சிப்போது வெய்யில் மண்டையைப் பிளந்தாலும், நள்ளிரவுப் பனி கொட்டினாலும் கலங்காது காத்துக்கிடந்த அதே மக்கள், பண்டிதரின் படம், தங்கள் ஊர் நகராட்சி மன்றத்திலே இருப்பது சகிக்க முடியாத அவமானம் என்று எண்ணி, துடித்துக் கிளம்புகிறார்கள்.

நகரத் தந்தைகள், நடுங்குங் குரலில் கெஞ்சுகிறார்கள், நாரீமணிகள், படத்தை அகற்றியாக வேண்டும் என்று வீர முழக்கமிடுகிறார்கள்

துப்பாக்கியுடன் போலீஸ் புகுந்து, அவர்களை விரட்டுகிறது!

படம் காப்பாற்றப்படுகிறது!!

கட்டாக் பகுதியிலே நடைபெற்ற சம்பவம்!!

பாரெங்கும் புகழொளி பரவிட, அகில உலகப் புகழ் அணியாகத் துவங்கிடக் கொலுவீற்றிருக்கும் நேரு பண்டிதருக்கு, இந்தக் கதி!! சிந்திக்க மறுக்கும் சிறு நரிகள், சிங்கத்துக்கு வந்துற்ற இந்தப் பங்கத்தைக் கண்டாவது பாடம் பெறவேண்டும், பெறுவார்களா!!

பெறுவர், அங்கு பெண்கள் காட்டிய நெஞ்சுறுதியில் நூற்றிலோர் பங்கேனும், இங்கு ஆடவரேனும் கொண்டால்!!

பஞ்சாமிர்தம்

மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டன!

தடியால் தாக்கப்பட்டனர்.

கண்ணீர்க் குண்டுகள் வீசப்பட்டனர்!

போலீசும் பட்டாளமும் 'ரோந்து' வருகிறது! நூற்றுக்கணக்கானவர்கள் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்!!

இருந்தால் என்ன! இதோ பர்ஷியா மன்னர் பவனி வரப்போகிறார்.

நேருவே இப்படியா அனியாயம் செய்வது? பண்டிதரே, எங்கு பார்த்தாலும் அடக்குமுறை தலைவிரித்தாடுகிறதே, நியாயந்தானா?—என்று மக்கள் மனம் நொந்து கேட்கின்றனர்.

ஐயோ மகனே!—என்று பல குடும்பங்களிலே தாய்மார்கள் மாரடித்து அழுகின்றனர்,

கண்ணாளா—மாண்டனையோ! கதியற்றவளானேனே; — என்று குமரிகள் கதறுகின்றனர்.

இரத்தக்கண்ணீர் சொரிகிறது நாடு!!

இருந்தால் என்ன—21 முறை மரியாதைக் குண்டுகள் வெடிக்கப்போகின்றன, பர்ஷியா மன்னர், ஷா, பவனி வரப்போகிறார்.

அவர் புகழப்போகிறார், பண்டிதரை! போதாதோ!! மக்கள் சபிக்கின்றனர்-அதனாலென்ன! பர்ஷிய நாட்டு மன்னர் பாராட்டப்போகிறார்.

பர்ஷியாவிலே, பண்டிதருக்கு அபாரமான செல்வாக்கோ என்றால், அதுவும் இல்லை!

பர்ஷியா பார்லிமெண்டில், நேரு பண்டிதர் மீது கண்டனம் சரமாரியாக!! பக்தாது ஒப்பந்தத்தைப் பண்டிதர் கண்டிக்கிறார் என்பதற்காக, நேரு பண்டிதரைத் தாக்கி பேசுகிறார்கள், பர்ஷியா பாரா[illegible] மன்றத்தில்!

இங்கோ, பவனி வரப் போகிறார் ஷா, 'பராக்கு' கூறப் போகிறார் பண்டிதர், மக்கள், சபித்தால் என்ன, மன்னர் வாழ்த்துகிறார்! அதுபோதும் என்கிறார் பண்டிதர்!!

தீப்பொறி பறக்க, மக்களின் உரிமை பற்றிப் பேசினாரே, அந்த நேருவா? என்கிறீர்களா? அந்த நேரு, எங்கே இருக்கிறார், இப்போது? மக்களின் உரிமைகளை நசுக்குவதில் வீரதீரம் காட்டும் நேரு அல்லவா இப்போது இருக்கிறார்.

மன்னர்கள் இங்கு பவனி வருகிறபோது கிடைக்கும் புகழுரைதான், இப்போதுள்ள நேருவுக்குப் பஞ்சாமிர்தம்!!

இந்தப் பஞ்சாமிர்தம் அடிக்கடி கிடைக்கிறது, போதும் — என்று பூரிப்படைகிறார் பண்டிதர்!

கட்டாக்கில் பாரிஸ்!

காலிகள்! சுட்டுத்தள்ளுங்கள் இந்தக் கயவர்களை!!

எவ்வளவு துணிவு இந்த மானிடப் பதர்களுக்கு—சிறைச்சாலையைத் தாக்கினரே!

சுடு! பிடி, சுடு! சுடு, ஓடட்டும்! ஓட ஓடச் சுடு! சுட்டுத்தள்ளு! கண்ட இடத்தில் சுடு! பிணமாகக் கீழே விழட்டும், சுடு, சுடு!

கட்டாக்கிலே, ஆத்திரமடைந்த மக்கள் கூட்டம், சிறைச்சாலையைத் தாக்கித்தூளாக்கி, உள்ளே இருந்த கைதிகளை விடுதலை செய்தனர்!

காலிகளின் செயல் இது! கண்டதும் சுடு! —என்று சர்க்கார் உத்தரவு கிளம்பிற்று—பிணம் கீழே விழுந்தது—இரத்தம் மண்ணைச் சேறாக்கிற்று.

சிறையை உடைத்தவர்களைக் காலிகள், என்று கண்டிக்கிறது சர்க்கார்—இங்கே—இன்று.

பிரான்சு நாட்டிலே முன்னம், கொடுங்கோலனை எதிர்த்து மக்கள்கிளம்பினர்—பாஸ்டிலி எனும் சிறைச்சாலை தூளாக்கப்பட்டது; கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

கட்டாக்கில் இப்போது நடைபெற்ற சம்பவம், அன்று பாரிசில் நடைபெற்றது.

கட்டாக் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள், காலிகள் என்று ஏசப்படுகிறார்கள்.

பாஸ்ட்டிலி சிறையை (பிரான்சில்.) தாக்கினவர்களை, 'வரலாறு' மக்கள் உரிமைக்காகப் போரிட்ட உத்தமர்கள், விடுதலை வீரர்கள், புரட்சி மூலம் மக்களாட்சியை எழச் செய்த தீரர்கள், என்று பாராட்டுகிறது.

வாலிபர்கள், மாணவர்கள், வரலாறு படிக்கிறார்கள். ★

பம்பாய் பாடம்

"ராஜ்ய புனரமைப்புபற்றி ஏதாவது முடிவு செய்யப்பட்டிருந்தால், அதுவே இறுதியான முடிவாக இருக்காது. இத்தகைய முடிவுகளுக்கு ஸ்திரத் தன்மை கிடையாது."

71-பேர் மாண்டனர்; நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயப்படுத்தப்பட்டனர்; கோடிக்கணக்கிலே பொருள் நஷ்டம்; பம்பாயில் புரட்சிப் புயல் கடுமையாகக் கிளம்பிற்று; அடக்குமுறை, ஆர்ப்பரித்தது.

முன்வைத்த காலை பின்வைக்க மாட்டோம் என்று வீரம் பேசினார் நேரு.

அதே நேருபண்டிதர், புது டில்லியில் ஜனவரி 25-ல் ராஜ்ய புனரமைப்பு முடிவு இறுதியானதல்ல—மாற்றலாம்!! என்று பேசுகிறார்.

பம்பாய், பண்டிதருக்குப் பாடம் கற்பித்துவிட்டது!!

வீரம் பேசியவர், பேரம் பேசுகிறார்!!

தம்பி! தயார்! தயார்!!

தம்பி,

சிறைக்கதவுகள் தூளாயின! போலீஸ் ஸ்டேஷன்கள் கொளுத்தப்பட்டன! இரயில்வேக்கள் தடம் புரண்டன! வட்டமிடும் விமானம் வந்திறங்க முடியவில்லை, பாடவந்த பாகவதர்கள் வீடு திரும்பியோடினர், ஆலைச் சங்கு ஊதவில்லை, மாலைக் காட்சிகள் கொட்டகையில் இல்லை, பள்ளிக்கூடம் இல்லை, பணிமனைகள் வேலைசெய்யவில்லை, போக்குவரத்து செயலற்று நின்றது — நாடு போர்க்கோலம் பூண்டுவிட்டது.

"எத்தனை எத்தனை இலட்சம்! அவர்கட்குத்தான் என்னிடம் எத்தகைய பக்தி! எவரும் கண்டு சொக்கிடும் வகையிலல்லவா வரவேற்புகள் அளிக்கிறார்கள்! மலர் மாரி பொழிகிறார்கள்! இதயத்தைக் காணிக்கையாக்கித் தருகிறார்கள். நான் செல்லும் பாதையில் மலர் தூவி, என் முன் சிரம் தாழ்த்தி நிற்கிறார்கள். என் சுட்டு விரல் காட்டும் வழியில் சென்று செயல் புரியக் காத்துக்கிடக்கிறார்கள் கோடிக்கணக்கான மக்கள். வெள்ளிப் பனி படர்ந்து, வண்ணப் பூக்களும் வகை வகையான பழங்களும் குலுங்கிடும் பூஞ்சோலைகளும், படகு வீடுகள் மிதந்திடும் பாங்கான ஏரிகளும் கொண்ட எழில் மிகு காஷ்மீரிலிருந்து, கடல்கள் ஒன்றை ஒன்று முத்தமிட்டுத் தழுவிக்கொள்வது கண்டோ என்னவோ முறுவலித்து நிற்கும் குமரி முனை வரையிலும், அவர்கள், பஞ்சாபிகள், சிந்திகள், மார்வாடிகள குஜராத்திகள், வங்கத்தார் கலிங்கத்தார், மராட்டியர் ஆந்திரர், ஒரியர், தமிழர், கேரளத்தார் கன்னடத்தார், இந்து முஸ்லீம், பார்சி, கிருஸ்தவர் எனும் எவராக இருப்பினும், அவரெல்லாம் என்னைக் காணுந்தோறும் காணுந்தோறும், "எமை ஆளும் தலைவா வருக! எமக்கு வாழ்வளித்த மாவீரனே வாழ்க! உலகில் உயரிடம் பெற்றவனே வருக! ஆசிய ஜோதியே வருக! அகிலம் புகழும் ஆற்றலரசே வாழ்க! என்றெல்லாம் வாழ்த்தி வரவேற்கிறார்கள்— என்னே அவர்தம் அன்பு! எவரிடமும் இது நாள் வரை காட்டாத பேரன்பை என்பால் இம் மக்கள் காட்டுகின்றனர்! உலகப் பெருந் தலைவர்கட்கெல்லாம், இந்தக் காட்சியைக் கண்டால், சிறிதளவு பொறாமையாகக்கூட இருக்கும்!—" என்றெல்லாம் எண்ணி எந்தப் பண்டித நேரு புளகாங்கித மடைகிறாரோ, அதே பண்டிதர்தான் ஆட்சி செய்கிறார், அவர்தம் கொற்றம் கவிழவில்லை, எனினும் கோல் சாய்ந்தது என்று அறிந்த மக்கள், எத்துணைப் பேராதரவு அளித்துப் பெருந்தலைவராக்கினோம்! காட்டிய வழியெல்லாம் சென்றோம், களத்தில் நின்று கடும் போரிட்டோம், கேட்ட காணிக்கை எல்லாம் கொடுத்தோம், அவரைக் கண்டதும் அகமும் முகமும் மலர நின்றோம், ஆயிரம் புகழுரைகளால் அர்ச்சித்தோம், நீதியின் பிறப்பிடமே! நேர்மையின் இருப்பிடமே! உரிமையின் உயர்வை உணர்ந்த உத்தமனே! மக்கள் மனப்போக்கை மதித்திடும் மாவீரனே! என்றெல்லாம் சிந்து பாடினோம், வந்தனை வழிபாடு செய்து, நொந்த வாழ்வினைச் செம்மைப்படுத்தி அருளும்படி தேவனைத் தொழுதிடும் பக்தர் போல இவர் முன் நின்றோம், அவர் பவனி வருகிறார் நமது பட்டினத்துக்கு என்றால், அந்நாளைத் திருநாளாக்கினோம், ஊரெல்லாம் எழிலாக்கி, உளமெலாம் மகிழ்வு மயமாக்கி, மணிக்கொடியைப் பறக்கவிட்டு, மகர தோரணங்கள் கட்டி பாதைகளைச் செப்பனிட்டு இல்லங்களில் புத்தொளி காட்டி, வரவேற்று மகிழ்ந்தோம், நம்மிடம் இத்துணை அன்பினைப் பெற்றவர், நம்மிடம் இவ்வளவு ஆதரவு பெற்றவர், ஐயகோ! இவ்வளவு கன்னெஞ்சராகவா மாறிவிட வேண்டும். யாரிடம் நியாயம் கிடைக்குமென்று எதிர்பார்த்து, ஏத்தி ஏத்தித் தொழுது வந்தோமோ, அவரே அல்லவா, அநீதிக்குப் பரிந்து பேசுகிறார், அக்ரமத்துக்கு உடந்தையாகிறார்! எவரிடம் நல்வழி காட்டிடும் இன்மொழி கிடைக்கும் என்று எதிர்பார்த்தோமோ, அவரிடமிருந்தல்லவா, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சும், ஏறெடுத்தும் பாரேன் என்ற போக்கும், என் ஆணையை அறியீரா என்ற ஆர்ப்பரிப்பும், என்னை எதிர்ப்போர் என்ன கதி அடைவர் தெரியுமா என்ற மிரட்டலும் பீறிட்டுக்கிளம்புகிறது. பண்டிதரே! பண்டிதரே! பாமரருக்குப் பாதுகாவலர் என்ற பட்டப் பெயர் பெற்றது போதும், இனி 'இம்'மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம் என்று தண்டனை கொடுக்கும் கொடுங்கோலராகி மகிழலாம என்று துணிந்துவிட்டீரோ! ஏனோ இக்கெடுமதி? எதற்கோ இக்கடும் சித்தம்? இதற்கோ நீர் எமக்கெல்லாம் இத்துணைக் காலம் நம்பிக்கை ஊட்டி வந்தீர். அழகாக ஆடும் பாம்பு, 'படம்' கண்டு பரவசமடைந்



திருப்போன் சிறிதளவு ஏமாந்ததும், அவனைத் தன் நச்சுப் பல்லால் தீண்டிக்கொல்லுவது போலல்லவா நிலைமை ஆகிவிட்டது! இறுமாந்து கிடந்தோம், எமது பண்டிதருக்கு இணை ஏது என்று கேட்டு மகிழ்ந்தோம்! அவர் அறியாத பொருளில்லை, அவர் புகழ் பரவாத நாடில்லை, அவர் சொல் கேளாத தலைவனில்லை, அவர் உறவு நாடாத நாடில்லை! கர்ஜனைபுரியும் கம்யூனிஸ்டு நாட்டுத் தலைவர்கள், அவர் முன் காதல் கானம் பாடி நிற்கிறார்கள்! தங்கத் தாளம் கொட்டிப் பிறரை ஆடச் செய்யும் அமெரிக்காவும், தங்கத்தையும் கொட்டிக் கொடுத்துவிட்டு தயவுக்கும் காத்துக்கிடக்கிறது! கண்டதுண்டோ இவர்போல்!! என்றெல்லாம் கேட்டோம், மார்பை நிமிர்த்தி நின்று கேட்டோம்!

பேதைகளே! என்னை முழுவதும் கண்டுவிட்டீர்களோ! வீர சுதந்திரம் வேண்டி நின்ற கோலம், காந்தியாரின் பாதம் பணிந்த கோலம், வெஞ்சிறையில் வாடிக்கிடந்த கோலம், சமதர்மம் பேசி மகிழ்வித்தகோலம், அரியணை அமர்ந்த கோலம், அவனி எங்கணும் பவனி வந்த கோலம், இவைகளைத்தானே கண்டீர்! இவைகளைக் கண்டுவிட்டால் போதுமோ? கருத்தற்றவர்களே! கோலமெல்லாம் கண்டுவிட்டதாக உமது எண்ணமோ? இதோ காணீர் ஓர் கோலம்! கண் அலட்சியத்தை உமிழ, கரம் துப்பாக்கி தூக்கி நிற்போரை ஏவிடும் குறிகாட்ட, நின்று, 'ஏன்' என்று கேட்போரை, என் பாதையில் குறுக்கிடுவோரை, என் அறிவைச் சந்தேகிப்பவர்களை சுட்டுத் தள்ளிடும் 'சம்ஹாரக் கோலம்' காட்டுகிறேன், காணீர், இதுவும் கண்டால்தான் என்னைக் கண்டறிந்து கொண்டதாக முடியும். என்று கூறுபவர் போலல்லவா, கொடுங்கோலர்கள் எந்த மொழி பேசுவரோ, எந்த விழி காட்டுவரோ, எந்த முறை கொள்வரோ, அது போன்று நடக்கத் தலைப்பட்டுள்ளார்! இத்தனைக்கும் நாம் அவர்க்கு இழைத்த தீங்கு ஏதேனும் உண்டோ? மணிமுடியைத் தட்டிப் பறித்திடத் திட்டமிட்டோமா, அவருடைய அரண்மனை வாழ்வுக்குக் குந்தகம் விளைவித்தோமா, அடிதொழ மறந்தோமா, அன்பு பொழிவதை நிறுத்திக்கொண்டோமா! இல்லையே! விளக்குக்கு எண்ணெய் கேட்டோம், விழிக்குப் பார்வை இருத்தல் வேண்டுமென்று சொன்னோம், உரிமை கேட்டோம் — உப்பரிகை வாழ்வுகூடக் கேட்டோமில்லை! வாக்களித்ததைக் கேட்டோம், பலகாலமாகக் கூறிவந்த ஆசைவார்த்தையை நிறைவேற்றித் தரும்படி கேட்டோம், இழந்ததைக் கேட்டோம், பிறர் எவருக்கும் இடரோ இழிவோ தராத, தன்மான உரிமை கேட்டோம், தாயகம் கேட்டோம்! தாயகம் கேட்டோம், பேயகம் ஆக்கிவிடுகிறேன் நாட்டை என்று இப்பெருந் தலைவர் கிளம்பிடவேண்டும்! பிறப்புரிமை கேட்டோம், அதற்கோ நம்மை வேட்டையாடி வாட்டி வதைக்கக் கிளம்பிவிட்டார் இந்த வல்லவர்! தாயகம் கேட்பது தவறா? கேளாதிருப்போன் மனிதன்தானா? கேட்டோர் பெறாது போயினர் என்று வரலாற்றுச் சுவடி காட்டுகிறதோ? தாயகம் தரப்படும், சுற்றிலுமுள்ள கள்ளிகாளானும், சூழ்ந்துகொண்டுள்ள வெள்ளை ஆட்சி எனும் முட்புதரும் அழிக்கப்பட்டான பிறகு, நிச்சயம், தாயகம் தரப்படும்! மலைமேல் செல்வது மூலிகை எடுக்க, கடலில் குளிப்பது முத்து எடுக்க, காடு செல்வது சந்தனம் பெற, பூமியைக் குடைவது பொன் எடுக்க, என்பதுபோல, வெள்ளையரை எதிர்த்துப் போராடிச் சுயயாட்சி பெறுவதே, தாயகம் அவரவர்க்குக் கிடைக்கச் செய்வதற்கேதான் என்று சொன்ன சொல் கொஞ்சமா, கொடுத்த வாக்குறுதி வெறும் வார்த்தைக்கோவைதானா, தீர்மானங்கள் எழுதப்பட்ட தாட்கள், குப்பைதானா — இவைதமை மறந்து, மமதை மிகுந்து, தாயகமா வேண்டும் தாயகம்! இதோ அங்கு செல்லும் வழி, என்று இறுமாப்புடன் கூறி, துப்பாக்கியை அல்லவா பேசவைக்கிறார்! கேட்டது தாயகம், அவர் கொடுப்பதோ கல்லறை! இஃதோ இவர், நம்மிடமிருந்து பெற்றதத்தனைக்கும் நன்றி காட்டும் செயல்! என்று கேட்டனர், கொதித்தெழுந்தனர்-ஓடும் இரயில் நின்றது, பாடும் இடம் பீதிகொண்டது, பள்ளிகளில் மாணவருமில்லை, ஆசிரியருமில்லை, வகுப்பறையில் நடைபெற்ற பாடமத்தனையும் அளித்த உரிமை உணர்ச்சி அவர்களைச் சீறிப் போரிடச் செய்தது, அமைச்சர்கள் அச்சத்தால் தாக்குண்டனர், காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் கதிகலங்கிப்போயினர், போலீஸ்! போலீஸ்! என்று கூவியபடி ஓடினர்—எங்கும் கலாம் -பம்பாயில் கோலாப்பூரில், புனாவில் கட்டாக்கில், கல்கத்தாவில் நாசிக்கில், சட்டம் சரிந்துவிட்டதோ என்று இங்குள்ளோர் கேட்டிடவும், நேருவின் செல்வாக்கு காகிதக் கோட்டைதானோ என்று வெளிநாடுகளில் கேலி பேசிடவுமானதோர் நிலைமை ஏற்பட்டது. எல்லாக் கிளர்ச்சியும், குண்டுகிளம்பும் வரையில்தான், முழக்கமிட்டவன் ஐயோ என்று அலறிக் கீழே விழுந்து புரண்டு, பிணமாவது கண்டால், காக்கை குருவிக் கூட்டம் கல் கண்டதும் கடுகிப்போதல் போல இந்த வீராதி வீரர்கள் வீறிட்டழுதபடி ஓடோடிச் செல்வர் என்று சர்க்கார் எண்ணிற்று! துப்பாக்கி முழங்கிற்று! எழுபது பிணங்கள், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமுற்றனர். ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தடியடி. ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறையில், எனினும் எதிர்ப்புணர்ச்சி மடியவில்லை. எக்காளம் குறையவில்லை, எமது உரிமையையாவது தாருங்கள், அல்லது உயிரையாவது பறித்துக் கொள்ளுங்கள் என்று கூறி, மார்காட்டி நின்றனர் மக்கள்.

இவர்கள்தானா புல்கானின் பவனியின்போது நேருபண்டிதரின் புகழ் பாடி நின்றவர்கள் என்று எவரும் திடுக்கிட்டுக் கேட்பர். எங்கிருந்து பிறந்தது இந்த வீரம்? எவரிடமிருந்து கற்றனர் இந்த உரிமை முழக்கத்தை? 'ஜே' போட்டுத் திரிந்தவர்கள் 'சீ' கூறி உமிழ்கிறார்களே, படத்திறப்பு விழா நடத்தியவர்கள், சிலைகளை மூளியாக்குகிறார்களே, என்று எண்ணி சர்க்கார் திகைக்கவேண்டி வந்தது. தம்பி, இந்தத் திங்கள், உத்தரப் பிரதேசத்தில் உருவாகியுள்ள சர்வாதிகாரத்தை எதிர்த்துக் கிளம்பிய சூறாவளி, நேருவின் கண்ணையும் திறந்திருக்கும், வெளிநாட்டுத் தலைவர்கள் மெச்சிக்கொள்வதற்காக, நேரு, முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம் என்று வீரம் பேசுகிறார்—ஆனால், நடுக்கம் காலில் மட்டுமல்ல, கருத்திலும் புகுந்துவிட்டது.

மொழிவழி அரசு என்ற திட்டத்துக்காகவே, இத்துணை பயங்கர நிலைமூண்டது.

செய்தி

14—1—56 சனிக்கிழமை அன்று கோவில்பட்டியில் தோழர் சோ. மு. காசி அவர்களின் புதுமனை புகு விழா சிறப்புற நடைபெற்றது.

கதர் கட்டினாலே ஆபத்து என்று எண்ணிப் பீதி கொள்ளும் நிலைமை இன்னமும் அங்கெல்லாம் நீங்கவில்லை.

பண்டிதரின் பவனியே சிறிதளவு தடைபட்டுப் போய் நிற்கிறது.

புதிய போலீஸ் படையும், துருப்புகளும், 'கலகம்' நேரிட்ட நகர்களில் வந்து குவிந்தவண்ணம் உள்ளன.

பம்பாயில் உத்தரப் பிரதேசப் போலீஸ், ஒரிசாவுக்கு மத்தியப் பிரதேசப் போலீஸ்! இவ்விதம் 'ராஜதந்திரம்' கையாளப்பட்டு வருகிறது. எரிமலை மீண்டும் எப்போது நெருப்பைக் கக்கும் என்று கூற முடியாத நிலைமை. நாடு, பெருஞ் சோதனையில் சிக்கிக் கிடக்கிறது என்று காங்கிரஸ் தலைவர்களே பீதியுடன் பேசுகின்றனர்.

அருந்தமிழ் நாட்டில் மட்டும், தம்பி! அற்புதமான அமைதி நிலவுகிறது! யாதும் ஊரே, யாவரும் கேளிர்! அக்ரமத்தை உணர்ந்தோர் எத்துணைபேர் என்பதையும் அறிய முடியவில்லை. மாணவர்கள்மட்டுமே இதுபோது, நாட்டு மானங் காப்போம் என்று கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பியுள்ளனர், மற்றையோரின் ஒரு பகுதியினர், மனம் இறுகிக் கிடக்கின்றது; மற்றோர் பகுதியில், மனமாச்சரியங்களை விட்டொழிக்கமுடியாது திண்டாடுவோரும், பிரச்சினையின் அளவு கண்டு, நம்மால் எப்படி இதனைத் தீர்த்துவைக்கமுடியும் என்று திகைத்துக் கிடப்போரும், பிரச்சினை தீருகிறதோ இல்லையோ, இதை யார் தீர்த்துவைப்பதால் செல்வாக்கு பெற்றுவிடுவார்களோ என்று பொச்சரிப்பால் பயமடைவோருமாக, இங்கு இருப்பதால், தம்பி! அக்கிரமம் செய்யப்பட்டிருப்பதுமட்டுமல்லாமல், அதனால் என்ன? என்றும், ஆமாம் அப்படித்தான் என்றும், ஆனது ஆகிவிட்டது, இனி செய்யக்கூடியது ஏதுமில்லை என்றும் பேசும் அமைச்சர்களும், எஜமானுக்கு உடலைச் சொரிந்துவிட்டு, அவர் மகிழும்போது ஊதியத்தை உயர்த்தச் சொல்லிக் கெஞ்சும் ஊழியக்காரன் போக்கிலே சில அமைச்சர்கள் இங்கு பேசவும், உரிமைக்காகத் துணிந்து பேசுபவர்களை ஏசவும் துணிவு பெறுகிறார்கள் — துரைத்தனம் இருக்கிறதல்லவா துணைக்கு, அதனால்.

தம்பி! பிரச்சினை உனக்கு நன்கு தெரியும்—விளக்கம் தேவையில்லை,

"மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு, சோஷலிச திராவிடக் குடி அரசுக் கூட்டாட்சி அமைப்பது"

என்பதல்லவா நமது கொள்கை' அதற்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் — அதற்காகப் பணியாற்றி வருகிறோம்.

நாம் இதற்கு இப்போது போரிட்டாக வேண்டிய கட்டம் பிறந்துவிட்டது—போர் என்றால், கண்ணியம் கடமைகட்டுப்பாடு கெடாத, அமைதி குலையாத, பலாத்காரம் தலைகாட்டாத அறப்போர் என்பதையும் அறிந்திருக்கிறாய், தம்பி! அதற்கான வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம், பூத்துக் கிடக்கும் மல்லிகைக் கொத்தினைப் பறித்துச் சூடிக்கொள்ளப் பூங்கொடியாள், புள்ளிமானெனத் துள்ளி ஓடுவது போல, களம்சென்றுபழக்கப்பட்டும் இருக்கிறாய்.

தி. மு. கழகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பில் உள்ளவர்கள், குறிப்பாக நமது பொதுச் செயலாளர் இதனை மறந்து, இது நாள்வரை வாளா இருந்துவிடவில்லை.

நாட்டிலே கிடைத்திடக்கூடிய, நல்லோர் அனைவரும் தந்திடக்கூடிய 'சக்தி' அவ்வளவையும் ஒன்றாகத் திரட்டி, ஒரு முனையில் நிறுத்தி, ஒழுங்குபடுத்திப் போரிட வேண்டிய நிலைமை இப்போது.

ஆற்றல் நம்மிடம் நிரம்ப இருக்கிறது — ஆயிரமாயிரம் தோழர்கள் வீரச் செயலுக்கும் கஷ்டநஷ்டம் ஏற்பதற்கும் உளர்—அறிந்து அகமகிழ்கிறேன் — எனினும், ஆற்றல் கொண்டவர் என்ற முறையில், நாம் அறப்போர் துவக்கினால், பிறரிடமிருந்து பெறக்கூடிய துணையை இழந்திட வேண்டி நேரிடக்கூடும் என்பதுமட்டுமல்லாமல், நாம் அவசரப்பட்டுத் துவக்கி விட்டதால், அருமையாக அமைய இருந்த ஓர் 'ஐக்கியம்' கூட்டு முயற்சி கெட்டுவிட்டது என்று பழி கூறுவோர் இருக்கிறார்களே தம்பி! அதற்கேன் இடமளிக்க வேண்டும், சிறிதளவு பொறுத்திருப்போம், பெருமுயற்சி ஒன்று எடுத்து, பேரவை என்று கூறத்தக்கதோர் கூட்டுமுயற்சிக்கு வழி காண்போம் என்று எனக்குத் தோன்றிற்று; ஆச்சரியம் இதிலே இல்லை, பொதுச் செயலாளருக்கும் தோன்றிற்று; அவருடன் அடிக்கடி அரசியல் பிரச்சினைகளையும் கழகப் பிரச்சினைகளையும் கலந்து பேசும் வாய்ப்பினை நான் பெற்று மகிழ்பவன்—எனவே, கலந்து பேச முடிந்தது, ஒத்த கருத்து அவர் உள்ளத்திலும் இருக்கக் கண்டேன்; களிப்புற்றேன்.

இதற்கிடையில், பெரியார், இந்தப் பிரச்சினை சம்பந்தமாகத் திருச்சியில் பேசியதாகப் பத்திரிகைச் செய்தி கண்டேன் — கண்களை அகலத் திறந்து பார்த்தேன் — ஆச்சரியத்தால் மூர்ச்சையாகிவிடக்கூடிய நிலைமை—அவர் நம்மையும் அழைத்து ஒரு பொதுத் திட்டம் தீட்டப்போவதாகப் பேசினார் என்று பத்திரிகையில் இருந்தது. பாழும் மனம் கேட்கிறதா! எவ்வளவு பட்டாலும், இந்த ஒரு விஷயத்தில்மட்டும் எனக்குச் சபலம் இருப்பதுதான் உனக்குத் தெரியுமே. எனவே, அப்படியோர் அருஞ்செயலைச் செய்வதற்குமட்டும் முன்வந்து, நம்மைப்பற்றிக்கொண்டுள்ள வெறுப்பையும், அதன் பயனாகவே அவராகவே வளர்த்துக்கொண்ட வேதனையையும்,பொதுவாழ்க்கைத் துறையிலே, ஓட்டை ஒடிசல்கள், ஓடுகாலர்கள், கூடுவிட்டுக் கூடு பாய்வோர் ஆகியவர்களைக்கூடச் சகித்துக் கொள்ளுவேன், 'இதுகளை'மட்டும் நடமாட விடமாட்டேன் என்று பேசும் போக்கையும் மாற்றிக்கொண்டால், ஆஹா! இங்கு எத்தகைய இன்பச் சூழ்நிலை, இன எழுச்சி, விடுதலைக் கிளர்ச்சி காணக் கிடைக்கும் என்றெல்லாம் எண்ணினேன். நானே எதிர்பார்த்துக் கிடந்தேன்—நானாக அவரை நாடுவது என்றாலோ, 'வழி மறித்தான்களும் இடம் அடைத்தான்களும்' புடைசூழ அல்லவா அவர் நிற்கிறார்.

இந்நிலையில், அஞ்சற்க, அனைவரும் ஒன்று கூடுவோம், என்று கூறுவதுபோல, நண்பர் ம. பொ. சி. யின் தந்தி எனக்குக் கிடைத்தது—கலந்து பேசலாம் என்பதாக.

சென்னையில் அவர் என்னிடம் சுவையான தகவல்களைக் கூறினார் —எனக்குத் தெம்பும் நம்பிக்கையும் ஏற்படும் விதமான தகவல்கள்.

"பெரியாரும் நானும் கலந்து பேசினோம்" என்றார் ம. பொ. சி.

"பரவாயில்லையே, இப்போது நாம் ம. பொ. சியைப் பார்ப்பது, பாபமல்ல, இதற்கு எந்தப் பழியும் பிறவாதல்லவா—முதலில் பெரியா

(15-ம் பக்கம் பார்க்க)

ஆங்காங்கு

முதலாளிகள் புரட்சி!

சீச்சீச்சி! போ, போ, போ, என்று சீறியவர்கள்தான் அவர்கள்!

நாயினும் கேடாய் இத்தனை நாள்வரை எண்ணி வந்தார்கள் ஏழைகளீ.

ஏடா! மூடா! எட்டிப்போடா, தொழிலாளப் பயலே! — என்பது தவிர, வேறொரு இன்மொழியும் கூறியது கிடையாது.

தூசுபடா தும்பைநிற ஆடையை, ஒரு தொழிலாளி தொட்டுவிட்டாலே 'துடுக்கடக்குவேன், பார்!' என்று கர்ச்சித்த கனவான்கள், அவர்கள்.

பொட்டுப் பூச்சிகள்! புன்மைத் தேரைகள்! வேட்டுகண்டு வெருள்வோர்! துட்டு காட்டினால் துவள்வோர் மனித ஜன்மங்களா, அவைகள்! செச்சே! என்று எண்ணுபவர்கள்.

அப்படிப்பட்டவர்களிடமிருந்து ஒரு அதிசயச் செய்தி கிடைக்கிறது!

ஆலை மூலம் அரசனானவன் — வியாபாரக் கோமான் — மாடிவீட்டு மன்னன்—மாளிகைவாசி — கோடீஸ்வரன்—இலட்சாதிபதி — கார்கள் ஏழெட்டு வைத்திருப்பவன் — மனமோகன மாளிகை பெற்றிருப்போன், என்றெல்லாம் போற்றப்படக்கூடிய பூபதிகள் அவர்கள், வீதிகளுக்கு வந்துவிட்டார்கள். விழிகளிலே, கலக்கத்தோடு அல்ல—ஆனந்தம் பொங்கி வழிய.

ஐயோ, இப்படியாகிவிட்டதே, எமது நிலைமை — என்று, ஏங்கிய வண்ணம் அல்ல, இதயத் துடிப்புடன்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பிரபுக்கள், கார்களை விட்டிறங்கி வந்து, தெருக்களில் போய்க் கொண்டிருந்த தொழிலாளர்களை நோக்கிச் சென்று, அவர்களோடு கூடிக் குலவி கூத்தாடினராம், ஆனந்த நாட்டியம், நடைபெற்றதாம், கட்டியணைத்தனராம், கானம் பாடிக் களித்தனராம்.

தனி முறையில் இனி வியாபார வேட்டைகளில் ஈடுபடாது, தத்தமது உழைப்பையும் செல்வத்தையும் சர்க்காருக்கே ஒப்படைத்து விட முன்வந்துவிட்டனராம்.

தொழிலாளரோடு தொழிலாளராய்த் தாமும் வாழ்வதென்று, முடிவுகட்டிவிட்டனராம்.

முரட்டுக்குரல் கேட்காது இனிமேல், அன்பு தவழும் எங்கும்.

புள்ளிமான்கள் கூட்டத்திலே கலக்க புலிகள் துடிக்கின்றன. இயல்பையும் குணத்தையும் மாற்றிக் கொண்டு வாழ முடிவு செய்துவிட்டன.

எங்கே, இந்த அதிசயம் என்று கேட்கிறீர்களா? இங்கல்ல! புதிய சீனாவில்! இந்த அதிசயம் நிகழ்ந்த தேதி ஜன 22. இடம், ஷாங்காய் நகரம்.

காண்டன், டீன்ஸ்டின், பீகிங், சிங்கியாங் முதலிய நகரங்களிலுமுள்ள சகல பிரபுக்களும், தம்முடைய இந்த முடிவை சர்க்காருக்கு அறிவித்து, மக்களோடு மக்களாய் வாழ முன் வந்துவிட்டனர்.

கத்தியின்றி, ரத்தமின்றி, நடைபெறுகிறது புரட்சி! நடத்துவோர், தொழிலாளிகளல்ல; முதலாளிகள்! அங்கே, அது. இங்கோ...?

பாலைவன நாட்டில்!

"மன்னா! உமக்கு மகன் பிறக்கவில்லை யென்றால், மணிமுடி உமக்குச் சொந்தமாகாது; மக்களே எடுத்துக்கொள்வோம்" என்றது பார்லிமெண்டு.

"ஐயோ! இந்த சுகபோக வாழ்வு, சுந்தரமான மாளிகையும், பொன்னும் — மணியும்— மின்னும் வைரமும், பொது மக்கள் கைக்குப் போவதா? ஐயோ! ஐயோ!" என்று அலறிய வேந்தன், அந்தக் காரியத்துக்காக அழகி யொருத்தியைத் தேடிப் போனான், கெய்ரோவுக்கு.

"அடுக்குமோய்யா உமக்கு, கிழ வயதில், கின்னரம் கொட்டப்போகிறீரோ?" என்று கேட்டோரைப் பார்த்து, "வாரிசுக்காக" மணமுடிக்கிறேன் என்றான், அந்த அரசன். அவனுடை லிபியா நாடு பாலைவனம் சூழ்ந்ததே தவிர, அங்குள்ள மக்களின் மனவளம் அங்ஙனமாகிவிடவில்லை! அதனால், கடந்த ஜன 21ந் தேதி, பார்லிமெண்டினர்கூடி முடிவு கட்டிவிட்டனர்—மன்னனுக்கு மக்கட்பேறு ஏதுமில்லாததால், மணிமுடி, மன்னனுக்குப் பிறகு, மக்களையே சாரும் என்பதாக!

மறுக்க முடியவில்லை, ஏட்ரிஸ் எனும் பெயர்கொண்ட அந்த அரசனால். என்ன செய்வான்! வாரிசு தேட, வனிதையின் கையைப் பிடித்தான் கடந்த ஆண்டு. மாதங்கள் பன்னிரண்டுதான் ஓடினவே யன்றி, 'பலன்' ஏதும் இல்லை — வயோதிக வேந்தருக்கு எப்படி வாரிசு முளைக்கப் போகிறது என்கிற எண்ணத்தாலோ என்னவோ பார்லிமெண்டினர் இப்படி யொரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டனர்.

அவன் முன்னிலையிலேயே, அமைச்சன், இந்த முடிவை வெளியிட்டிருக்கிறான்.

எட்ரிசுக்குப் பிறகு, லிபியாவை மன்னனல்ல -பிரதிநிதித்துவ குழுதான் ஆளும்!

★

குனியக் குனியக் குட்டுகிறார்கள்

டில்லி, இங்குள்ள 'தேசியவாதிகள்' குனியக் குனியக் குட்டுகிறார்கள்.

ஆதிக்க வெறியன்றி வேறோர் காரணமே இல்லாத முறையில் இப்போது இரயில்வே ஸ்டேஷன்களில் 'இந்தி'யில் போர்டுகள் உள்ளன.

இதைக் கண்டு மனம் பதறுகிறது; இதைச் சட்டை செய்யாமல், இப்போது இரயில்வே ஸ்டேஷன்களில், அலுவலக அறைகளிலெல்லாம் 'இந்தி'யில் போர்டுகள் தொங்குவதற்கு ஏற்பாடாகிவிட்டது. 'இந்தி' போர்டுகளும் தயாராகிவிட்டன.

இந்த 'அவமானத்தை' எத்தனைக் காலம் தாங்கிக் கொள்வது?

வீரமும் விவேகியும் பூண்டோடு அழிந்தே போயினரா?

தன்மானம் அடியோடு ஒழிந்துபோய்விட்டதா?

"இந்த உலகத்துக்கு ஒரு கதை சொல்லலாமென நினைத்தேன். ஆனால் இந்த உலகமே ஒரு கதையாக இருக்கிறது. யாராவது ஒரு கதைக்கு ஒரு கதை சொல்வார்களா?"

உருதுக் கவிஞர், சீராப்.

✱

'உள்ளம் என்ற கோயிலின் ஒளி விளக்கு, பகுத்தறிவு. கோபம் என்ற புயல் வீசினால் அந்த அரிய விளக்கு அணைந்துவிடும். ஆகவே, கோபத்திற்கு இடம் கொடாதீர். பகுத்தறிவை அணைத்துவிடாதீர்'

இங்கர்சால்.

பலி

"தங்கள் மனமாளிகையிலிருந்து, மன்னவா! என்னை விரட்டிட எப்படித் துணிந்தீர்கள்? என்ன குற்றம் காண்கிறீர்கள் என்னிடம்? எந்தக் கண்களிலிருந்து காதலொளி வீசிற்றோ அவைகளா இந்தக் கொடுமையைக் கக்குகின்றன. தங்களை நான் மணாளனாக ஏற்ற நாளில், மன்னர் அவையிலே தங்கட்கு ஓர் இடம் கிடைக்கும் என்றுகூட எண்ணம் பிறந்திருக்க முடியாதே. நாட்டிலே இருந்து வந்த படைத்தலைவர்களிலே ஒருவராகத் தாங்கள் இருந்தபோதல்லவா தங்களை நாயகனாகப் பெற்றேன், நாடாளும் நிலை தங்கட்கு வந்ததும், காடாள நான் துரத்தப்பட வேண்டுமா! தங்களுடைய உயர்வு கண்டு உள்ளம் பூரித்துக் கிடந்தவளல்லவா நான், என் நாதனின் வீரமும் தீரமும், பெருங்காவியமாகிறது. என் கண்ணாளனின் காலடியிலே பிரான்சு நாடே கிடக்கிறது. என் கணவனின் சுட்டு

சி. என். ஏ.

விரல் காட்டும் திக்கு நோக்கிச் செல்லும் படைச் சூறாவளியிலே; சாம்ராஜ்யங்களெல்லாம் சரணாகதி ஆகின்றன! உலகமே போற்றிப் புகழ்

கிறது, என் உள்ளத்திலே கோயில் கொண்டுள்ளவனே! அவனை யாராலும் அடக்க முடியாது, ஆற்றல்மிக்கவன். அஞ்சா நெஞ்சன், என்று அவனியே புகழ்கிறது. எனினும், என் காதலுக்குக் கட்டுண்டு கிடப்பவர்தான் காவலன்! போர் வீரன் தானு கிடைத்தான் இவளுக்கு? எந்தக் களத்திலே சிக்கி, காலிழந்து முடமாகப் போகிருனே, கண்ணிழந்து கபோதியாகப்போகிருனே! இவனை மணம் செய்து கொண்டாளே, இவளுக்கென்ன எழிலுக்குக் குறைவா? என்று ஏளன மொழி பேசியோரை நான் காணும்போதெல்லாம், எப்படிப் பட்டவன் பார்த்தீர்களா என் கணவன், ஏமாளிகளே! மணிமுடி அவன் காலடியில்! மன்னர்கள் அவனுக்கு அடைப்பக்காரர்கள். மண்டிலங்கள் அவனுக்குப் பூப்பந்து! என்றெல்லாம் எண்ணிக் கொள்வேனே' ஏறுநடைகொண்டவனே! எட்டுத் திக்கிலும் வெற்றிக் கொடி நாட்டியவனே! என் இதயத்துக்கு இன்பமே! வாழ்வின் ஒளியே! புதிய வையகத்தை எனக்களித்த காதலனே! என்னையா, விலக்கிவிடத் துணிந்தீர்! என்னையா? உமது இன்பவல்லியையா? உண்மையாகத்தானு? கெட்ட கனவொன்று காண்கின்றேனு, இல்லையேல், கெடுமதிகொண்டு என்னை உண்மையிலேயே கொடுமை செய்யத்தான் துணிந்து விட்டீரா? துரையே! மாற்றார்களைக் கண்டதுண்டமாக்கிக் கழுகுக்கும் நரிக்கும் விருந்திட்டு, வெற்றி! வெற்றி! என்று களிநடம் புரிகிறீர் — வீரனின் பொழுதுபோக்கு—என்னைச் சித்திரவதை செய்வதுமா, உமக்கு ஏற்ற வீர விளையாட்டு, கண்டதுண்டமாக்கிவிட்டால் கவலையில்லை, என்னை உயிருடன் உலவவிட்டல்லவா, ஓராயிரம் ஈட்டிகளால் இதயத்தில் குத்த முனைந்துவிட்டீர். என் கணவர் என்று களிப்புடன், உரிமையுடன், யாரை நான் கண்டு கண்டு உளம்பூரித்துக்கிடந்தேனு, அவரை, ஐயோ! வேருேர் மங்கை, என் மணுளன் என்று உரிமை கொண்டாடுவதா, அதை நான் எங்கோ ஓர் மூலையில் கிடந்து கேட்டுச் சகிப்பதா! நான் ஆரத் தழுவிய அந்த உடலை வேருேர் ஆரணங்கு அணைத்து மகிழ்வதா, நான், வெட்கமும் வேதனையும்பற்றி இழுத்திட பதைபதைத்துப் புரள்வதா? மாளிகையிலும் மலர்த் தோட்டத்திலும், மாலை மதியத்தில் நீரோர் புதியவளுடன் உலவுவது, ஒதுக்கப்பட்டு, விரட்டப்பட்டு, கணவன் உயிருடனிருக்கும்போதே விதவைக் கோலம் பெற்று, நான் விம்மிக் கிடப்பதா! அதோ பார், பாவம், ஜோசபைன், கணவனுல் நிராகரிக்கப்பட்டவள், கலங்கித் தவிக்கிருள், கதியற்றவளானுள், என்று மாதர்கள் என்னைக் கண்டு கசிந்துருகுவதா — சிருர்கள் கை கொட்டிச் சிரிப்பதா! அன்பரே! எத்தனை எத்தனை இளைஞர்கள், என்னைத் தாங்கள் இன்பபுரிக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு, என் இதழமுதுக்கு ஏங்கிக் கிடந்தனர், என்பதை அறியமாட்டீரே, அவர்கள் இன்று, அரண்மனையை விட்டு விரட்டப்படும் என்னைக் காண நேரிட்டால், ஐயயோ! என்னென்ன கேலிமொழி பேசி என்னைக் கொல்வார்களோ! நெப்போலியன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நாடு பல நடுங்கும் என்று பிறர்கூறக் கேட்டதுண்டு, இதோ, நினைத்ததும் நடுக்கமெடுக்கிறதே! சிப்பிக்குள் இருக்கும் முத்தினை எடுப்பானேன், அதைச் சிலகாலம் சிந்தை மகிழ வைத்திருந்துவிட்டு, பிறகு சுக்குநூருக்கிச் சேறறிலே வீசுவானேன்? நான், சிப்பிக்குள் முத்தாகி இருந்தேனே! சிரித்துப் பேசினீர் — தடுத்துப்பார்த்தேன். காதலை வேண்டினீர் — காலங்கடந்த செயல் என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். இதயத்தை வென்றீர்—நானளித்த விருந்தும், நாதா! சுவையற்றதல்லவே! பயனற்றது, என்கிறீர், ஓர் பாலகன் இல்லாததால். வெட்கமாகத்தான் இருக்கிறது, எனினும் நமது காதல் வாழ்வு முழுக்க முழுக்க நமக்கே சொந்தம், அதிலே குழந்தை குறுக்கிடுவதையும் கர்த்தன் அனுமதிக்க மறுக்கிருர்போலும் எனறல்லவா எண்ணிக்கொண்டேன். தங்கள் மனம் மட்டும், வேறுவிதமாக எண்ணிடக் காரணம் யாதோ? மன்னவா! நமது காதல் வாழ்விலே 'கனி' கிடைக்கவில்லை எனபதாலேகசப்படைகிறீர் ஒன்று நான் நினைவூட்டுகிறேன், நான் பிள்ளைக் கனி அமுது பெற்றுத் தங்கட்குத் தர முடியாத பாவியாக இருக்கிறேனே தவிர, மலடி அல்லவே! இருவரல்லவா எனக்கு மகன் உளர்! பல கூறினுலும் பன்னிப்பன்னிச் சொன்னுலும், பாறை உருகுமா என்று கேட்கிருர்கள் படித்தறிந்தோர். பாகு மொழியாளே! என்று என்னைக் கொஞ்சு மொழியில் அழைத்து, களத்திலே மட்டுமல்ல, காதல் வாழ்விலே மட்டுமென்ன, என்று கேட்பதுபோல என்னுடன் குலவிய குணுளரே! என்னைக் கொல்லாதீர் — அபலையாக்காதீர் — நான் தாங்கிக்கொள்ளமாட்டேன் —வலிவு இல்லை; காதல் பொலிவினை இழந்திடத் துணிவு பிறக்காது, உள்ளம் படைத்த எவருக்கும். ஊராளும் உயர்நிலை தங்கட்குக் கிடைத்ததும் உள்ளத்தில் உறைபவள்! என்று யாரை அழைத்து வந்தீரோ, அவளையா, பதவிப்பேய்க்குப் பலியிட வேண்டும். வேண்டாம், வேந்தே! வேண்டாம்! வெந்தழலில் என்னைத்தள்ளிவிட்டுநீர் மணமுள்ள சந்தனத்தை மார்பகத்தே பூசிக் கொள்ளாதீர் — என் கண்ணீரைப் பன்னீராக்கிக் கொள்ளாதீர்—என் காதலைக் கருக்கி அழிக்காதீர். அத்தாணி மண்டபத்தில், புத்தம் புதிய பூவையை அழைத்துக் கொண்டு, நீர் 'ராஜநடை' நடக்கும் போது, உமமோடு வாழ்ந்து, உமக்காகவே வாழ்ந்து உளமாரக் காதலித்து வந்த இந்த அபாக்கியவதி, பொலிவிழந்து மதிப்பழிந்து, மரணப் படுகுழியைத் தேடித் தள்ளாடி நடந்து சென்றுகொண்டிருக்கிருள் என்று, உம்மாலே எண்ணமலிருக்க முடியாது — நிச்சயமாக முடியாது. இறையே! அந்த எண்ணம், உம்மைச் சும்மாவிடாது — உமது கிரீடம் முள் முடியாகும் — சிம்மாசனம் சர்ப்பாசனமாகும் — கொலுமண்டபம் கொடுமைக்கூடமாகும் — இதயம் சுக்குநூருகும்! ஆம் தூய காதலின் மீது ஆணை, என்னை மோசம் செய்துவிட்டு, உம்மாலே, வாழ்விலே புதிய வாசம் பெற்று மகிழ்ந்திருக்க முடியாது, நாம் இருவரும், ஒருவருக்காகவே ஒருவர் படைக்கப்பட்டிருக்கிறேரம்! தங்களை இன்று மணுளனுக ஏற்றுக்கொள்ள எவள்வருவதாயினும் தங்களிடம் காதல்கொண்டதால் அல்ல என்பதை, நான் நினைவூட்ட வேண்டுமா! ஒரு பேரரசுக்குக் காவலர் நெப்போலியன் அவரைக் கடிமணம் புரிந்துகொண்டால், அந்தஸ்தும் அதிகாரமும், செல்வமும் செல்வாக்கும் ஏராளமாகக் கிடைக்கும் என்ற எண்ணத்தினுலே மட்டுமே ஓர் ஏந்திழை உம்மை நாடுவாள். நான், தங்களைக் கண்டு மகிழ்ந்தேனே, அதுபோல

அல்ல; இப்போது உமக்கு வருபவள், அரண்மனையில் உள்ள ஆபரணாதிகளைக் கண்டு மகிழ்வாள் —எடுபிடிகள் கைகட்டி நிற்பது கண்டு களிப்பாள் — அரச அவையிலே காத்துக்கிடக்கும் கொலுப் பொம்மைகளைக் கண்டு ஆனந்தம் கொள்வாள். உம்மைக் கண்டல்ல, நிச்சயமாக உம்மைக் கண்டு, உள்ளத்தை நான் பெற்று மகிழ்ந்தேன், இப்போது வருபவள், உம்மிடம் குவிந்துள்ள உடைமைகளுக்காக வருகிறாள்!

நிலை உயர உயர, நாதா, தங்கள் நெஞ்சிலே இருந்து வந்த காதல் உலர வேண்டுமா! இது எந்த வகையான நீதியோ! களத்திலே கடும் போரிடும் சாதாரணப் போர் வீரனாக இருக்கும்போது மட்டுமே நான் தங்கட்குத் துணைவியாக இருக்கத்தக்கவளோ! கொலுவீற்றிருக்கும் கோமானானதும் வேறோர் கோதைதான் தேவையோ! கார் காலத்துக்கு ஓர் உடையும்வசந்தத்தின்போது வேறோர் வகையான உடையும் அணிகிறோம் —உள்ளத்திலே இடம் பெறும் உத்தமக் காதலுக்குமா, இது? என்றாலே எண்ணிப் பார்த்திடக்கூட முடியவில்லையே. யார் மூட்டிய போதனை? எவரிடம் கற்றீர் இக்கயமையினை? எந்தக் காதகர் கலகமூட்டினர்.

ஆற்றலரசே! இப்போது உமக்கு வந்துள்ள உயர்வுகண்டு பலருக்குப் பரிவும் பாசமும் சுரக்கும்; அது உண்மை என்று எண்ணிடலாமா? விளைந்த காட்டுக் குருவிகளும், மரம் பழுத்ததும் வட்டமிடும் வௌவால்களும், வாடி இருக்கும் கொக்குகளும், வலைகட்டும் சிலந்திகளும், மனித இனத்திலேயும் இருக்கத்தானே காண்கிறோம். இந்தக் கூட்டத்தில் யாரோ தங்கள் மனதை மாற்றியிருக்கிறார்கள்! வேண்டாம், வெற்றியால் ஏற்றம் பெற்ற வீரனே! என் உள்ளத்தை வேகவைக்காதீர். என்ன செய்ய முடியும் இந்தப் பேதையால் என்று எண்ணுவீர். களத்திலேயே உம்மை எதிர்த்திட யாருக்கும் ஆற்றல் இல்லை என்றால், கலகலெனப் பொலபொலெனக் கண்ணீர் சிந்துவதன்றி வேறேதும் செய்யத் தெரியுமா இவளால் என்று எண்ணுவீர். கண்ணாளா! இந்தக் கண்ணீர், நீர் இதுவரை கண்ட படைக்கலம் போன்றதல்ல! இது கன்னெஞ்சக் கோட்டை கட்டிக்கொண்டு அதற்குள்ளே ஒளித்துக் கொள்ளும் வஞ்சகத்தையும் சுட்டுச் சாம்பலாக்கவல்ல ஆற்றல் பெற்றது. பிதற்றுகிறாள் என்று கேலி பேசாதீர், பித்தம் பிடித்து பாரிஸ் பட்டினத்து நெடுஞ் சாலைகளிலே நான் பழைய நாட்களை எண்ணிக்கொண்டு, காதல் சிந்து பாடிக்கொண்டும், விளக்குக் கம்பங்களைக் கட்டி அணைத்துக்கொண்டும் ஆடை நெகிழ, கூந்தல் சரிய, அலங்கோல நடனமாடினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை. மலை உச்சியிலிருந்து, கீழே உருட்டி விடப்படும் சிறு மதலையின் கதி என்னாகும்—என் மனம் அந்நிலையன்றோ பெறுகிறது"

இவ்வளவும் இதற்கு மேலும் கேட்கத் தோன்றிற்று — உள்ளத்திலே ஓராயிரம் எண்ணங்கள் கொதித்தெழுந்தன, எனினும் ஜோசபைனால், ஒரு வார்த்தையும் பேசமுடியவில்லை, ஹா! என்றாள்— மயக்க மேலிட்டது — கீழே வீழ்ந்தாள்—மூச்சுப் பேச்சற்றுக் கிடந்தாள். நெப்போலியனும் திகைத்துப் போனான்.

ஜோசபைனுக்குக் குழந்தை பிறக்கவில்லை — பிரான்சுப் பேரரசுக்கு, இளவரசன் இல்லை!

நெப்போலியன், சக்கரவர்த்தி—நாட்டுக்கு வெற்றியும் கீர்த்தியும் தேடிக் கொடுத்தான் — புரட்சி பொசுக்கப்பட்டுவிட்டது — புது முறையை வெட்டி வீழ்த்தியாகிவிட்டது — பேரரசனாகிவிட்டான், போர் வீரனாகப் பயணத்தைத் துவக்கிய இந்த ரணகளச் சூரன். பேரரசன், பெற்றுத்தரவேண்டிய மற்றோர் சாதனை உண்டே, பரம்பரைப் பழக்கப்படி—அந்த வெற்றியை நெப்போலியன் தேடித்தரவில்லை—குழந்தை இல்லை—வாரிசு இல்லை!

வல்லமை முழுவதும் செலவிட்டு ஆபத்துகளைத் துரும்பாக எண்ணிப் போரிட்டுப் பெற்ற பேரரசு, நெப்போலியன் வாரிசு இன்றி இருந்தால், என்ன கதியாகும்? நெப்போலியனுடைய நெஞ்சிலே இந்த நச்சு நினைப்பு நுழைந்தது— வேகமாக வளர்ந்தது — விபரீதமான முடிவுக்கு வந்துவிட்டான், ஜோசபைனை விலக்கிவிடுவது; ராஜகுமாரி ஒருவளை மனைவியாகக் கொள்வது; அவள் தாயாவாள்; பிரான்சுக்கு ஓர் இளவரசனை ஈன்றெடுத்தளிப்பாள்; பரம்பரை நிலைக்கும், என்று எண்ணினான். துணிந்து இதை நிறைவேற்றித் தீருவது என்று செயலில் இறங்கிவிட்டான். நெப்போலியன் ஒரு முடிவு எடுத்துவிட்டால் தடுத்து நிறுத்த வல்லார் யார்? எப்போதுமே புகழொளியைத் தேடித் திரிந்துவந்தவன் நெப்போலியன்! பேராசைப் பெரும் பேய், பதவி மோகம், அவன் உள்ளத்தில் தழலாகிக் கிடந்தது. காதல்மட்டுமென்ன, அவன் திட்டத்தின் வெற்றிக்குத் தடையாக இருந்தால், கசக்கி வீசப்படத்தானே வேண்டும் — அதுதானே நெப்போலியன் முறை. அதை எங்ஙனமறிவாள், அவன் துணைவியாகி, அவன் அரசனாக்கப்பட்டதும் அரசியாகி விளங்கிய அழகி. ஜோசபைன் தன் கணவர், எதை வேண்டுமானாலும் செய்வார், இதயத்தை வேறு எந்தக் காரியத்துக்கும் இரும்பாக்கிக் கொள்வார், ஆனால் தன்னைப் பொறுத்தமட்டில், அவன் எப்பொழுதும் காதலைப் பொழியும் கண்ணாளனாகத்தான் இருப்பான் என்று எண்ணிக் கொண்டாள். பேதையே, பேதையே! பேரரசு அல்லவா இப்போது அவனுக்குப்பெரிதாகத் தெரிகிறது. உன் கண் தந்த கவிதையை அவன் இப்போது கேட்டு இன்புற முடியுமா! சக்கரவர்த்தி நெப்போலியன்! நெப்போலியன் உன்னிடம் காதல் வரம் கேட்டான் —காரிகையே! இப்போது சக்கரவர்த்தி ஒரு ராஜகுமாரியைக் கேட்கிறான், இளவரசன் வேண்டுமாம்! பட்டத்தரசன், வாரிசு இன்றியா போவது. அரசன் மகன் அரசனாக வேண்டும்! அந்த 'ஐதீகத்தை'ப் பாழாக்குவானா? கண் பொத்தினானே, கரம்பற்றினானே, என்று எண்ணிக்கிடக்கிறாயே, அவை காதல் விளையாட்டு! சிருங்கார சாஸ்திரம்! இப்போது அவன்

பொங்கல் மலர்

பல தோழர்கள் மலர் தேவை என்று எழுதுகிறார்கள். மலர் கைவசமில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி
திராவிடநாடு.

'ராஜ நீதி'யின்படி நடக்கிறான்—என்று ஜோசபைனுக்குக் கூறக்கூடியவர்கள், யார்? அவளைச் சூழ இருந்த சுந்தரிகள் யாவரும், திகைத்துப் போயினர். நெப்போலியன் இந்தப் பயங்கர முடிவு எடுப்பான் என்று எவரும் எண்ணவில்லை.

நெப்போலியன், ஜோசபைனிடம், கூறினான்,

"சாம்ராஜ்யத்தின் நலனுக்காக, சரசாங்கி! நான் உன்னை விலக்கிவிட்டு, வேறோர் அரசகுடும்பத்து அணங்கைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன். பிரான்சுக்கு ஓர் இளவரசன் தேவை. அவனை அளிக்கும்கடமை எனக்கு இருக்கிறது" என்றான்.

ஜோசபைன், தன் 'இல்லற ஜோதி'யாகக் கிடைக்கவேண்டுமென்று, மனுவிட்டு நின்றவன்தான் இதே நெப்போலியன். அவள், இவனை அங்காடியில் சந்தித்து மயக்கினவளல்ல, மலர்ச்சோலையில் கண்ணில்பட்டுக் கருத்தில் சென்று நுழைந்தவளல்ல. ஜோசபைன், இருக்குமிடம் அறிந்து சென்று, முகமன் கூறி, மறுத்துவிடக் கூடாது என்று மண்டியிட்டு, அவளை மணமுடித்துக்கொண்டவன், இந்த நெப்போலியன்.

அவன் ஜோசபைனைப் பெறுவதற்கேற்ற சூழ்நிலை அமைந்த கட்டமே, பாவலர்கள் கருத்துக்குச் சுவைதரும் காவியம் போன்றது.

இதோ, துவண்டு வீழ்ந்துகிடக்கிறாள், காதகன் காலடியில்; வேறோர் அரண்மனையில், தாதியர் புடைசூழ ஓர் அரசிளங்குமரி, அலங்காரவதியாகிக் கொண்டிருக்கிறாள், கொடியவனுக்கு மனையாட்டியாவதற்காக—பிரன்சு சக்கரவர்த்தினியாவதற்காக!

கீழே, மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கும் காரிகை, இந்தக் களம் சுற்றிக் கடும் போரிடும் கன்னெஞ்சக்காரனுக்குத் தன் இதயத்தைக் காணிக்கையாக்கித் தந்தாள்! வரப்போகிறாள் வேறோர் வனிதை, அரண்மனையில் வளரும் அலங்காரப் பொம்மை, காதலை அளிக்க அல்ல, 'வாரிசு' பெற்றுத்தர!

பிரான்சு நாட்டுப் பெரிய அதிகாரிகள், ராஜதந்திரம் அறிந்தவர்கள், பெண் கேட்கச் சென்று, அந்த 'அன்னத்தை'க் கொண்டு வரப் போகிறார்கள். இதோ, சிறகொடிந்த மாடப்புறா கீழே சாய்ந்து கிடக்கிறது-நெப்போலியன் இந்தப் பேசும் புறாவைக்கொள்ளப் பேசாதனவெல்லாம் பேசினான், முன்பு.

ஜோசபைனுக்கும் நெப்போலியனுக்கும் அறிமுகம்கூட ஆகாதிருந்த சூழ்நிலைதான் முதலில்.

புரட்சி மலர், நல்லாட்சி எனும் மணம்வீசும் என்று கருதப்பட்டது—பிறகு, அது நச்சு மலராகிவிட்டது என்று கூறப்பட்டு—மக்களை கட்டுத்திட்டத்துக்கு அடங்கி நடந்திடச் செய்யும், படைத்தலைவர் ஆட்சி புகுந்துவிட்ட நேரம். பாரிஸ் பட்டினத்துப் பதட்டக்காரர்களை அடக்குவதற்காக நெப்போலியன் நியமிக்கப்பட்டிருந்த சமயம்.

அப்போது ஒருநாள், அவன் அலுவலகத்தில், ஒரு வாலிபன், பள்ளி மாணவப் பருவத்தினன், வந்தான், வந்தனமளித்தான், பணிவுடன் ஒரு மனுச் செய்துகொண்டான்.

"என் தந்தை, பெருமைக்குரிய அதிகாரியே! புரட்சிக்காரரால் கொல்லப்பட்டுப் போனவர். அரசியல் அமளிகளில் அக்கறை காட்டாத ஓர் கண்ணியமான குடும்பம், எம்முடையது. ஒழுங்கை நிலைநாட்டும் பேராற்றலால், நாட்டிலே அமைதியை ஏற்படுத்திய தங்களிடம், நான் வேண்டுவதெல்லாம், என் தந்தையாரின் உடைவாள் திருப்பித் தரப்படவேண்டும் எம்மிடம், என்பதுதான். அவருடைய வீரவாள், எங்கள் குடும்பக் கீர்த்திக்கோர் சின்னம்! அந்தக் கருவூலத்தை மீட்டுக்கொண்டு வரும் பணியில் மகன் நான் ஈடுபட்டேன்—அருள் கூர்ந்து, வாளை, திருப்பித்தர உத்தரவளிக்கக்கோருகிறேன்" என்றான் வாலிபன் — சிறுவனென்றே கூறத்தகும் பருவத்தினன்.

நெப்போலியன், வாளைத் தந்தான்-முழங்காற்படியிட்டு, அதைப் பெற்றுக்கொண்ட அந்தச் சிறுவன், அதனை மார்புறத் தழுவினான், கண்களிலே அதனை ஒத்திக்கொண்டான், நெஞ்சு நெக்குருக அதனை நோக்கினான், களிப்புக் கண்ணீர் வழிந்தது. நெப்போலியனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தந்தையின் உடைவாளைத் தனயன் இவ்வளவு போற்றிப்பூஜிக்கிறானே! குடும்பக் கீர்த்தியிலேதான் இவனுக்கு எவ்வளவு பற்று, எத்துணை பெருமை! மிக உயர்தரமான குடும்பமாக இருக்கவேண்டும், இத்துணை மாண்பு பெறும் வகையில் இவனை வளர்த்துள்ள மாதா, வணங்கப்படத்தக்கவள், என்று எண்ணினான்.

அவளைக் கண்டான் — காதலிக்கத் தக்கவள் என்று உணர்ந்தான்.

ஜோசபைன், கணவனிழந்தவள்—கண்ணின் மணிகள்போல் இரு புதல்வர்களுடன் எளிய ஆனால் பிறர் கரம் எதிர்பாராத நிலையில் வாழ்ந்து வந்தவள்.

அவளுடைய கவர்ச்சியை, விதவைக் கோலம் குலைத்துவிடவில்லை; கட்டழகு கெடாத நிலையில், ஆயினும் கண்வலை வீசாக் காரிகையாக அவள் வாழ்ந்து வந்தாள். அந்தக் கவின்மலரைக் கண்டான் நெப்போலியன், உள்ளத்தை அர்ப்பணித்தான்.

அவன் அங்கு சென்றது, ஒரு மூதாட்டியைக்காண — முதுமைக் கோலத்தில், ஜெபமாலையை உருட்டிக்கொண்டுகிடக்கும் அம்மையைக் காணச் சென்றான் — அழகு மயிலைக் கண்டான்! மாண்புள்ளவன் உன் மகன்! மண்டிலம் இவன் போன்றோரை அளித்திடும் மாதர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்று முகமன்கூறச் சென்றான், அவன் கண்டதோ விரித்தாடாவிடினும், கலாபத்தை இழக்காத நிலையில் உள்ள மயிலாளை! முகமன் கூறச் சென்றவன், காதல் பேசிடும் நிலை பிறந்தது.

அவள் அவனை உடனே ஏற்றுக் கொள்ளவில்லை.

ஈராண்டு மூத்தவள் அவனினும், இரு புதல்வர்களுக்குத் தாய்; எனவே, போர்வீரனுடைய காதலை ஏற்றுக்கொள்வதா, எத்தனையோ அலைகள் இதுபோல எழும் என்று கருதி அலட்சியமாக இருந்துவிடுவதா என்று அமைதியாக இருந்தே எண்ணிட முடிந்தது. முடிவில், தன்னை நெப்போலியனுக்கு அர்ப்பணித்தாள்.

களத்திலே கடும்போரிட்டுக் களைத்துப்போய், இரவு படுக்கப் போகும்போதுகூட, நெப்போலியன், ஜோசபைன் பற்றிய நினைவு கொண்டு, காதற்கடிதங்கள் தீட்டுவான். அவ்வளவு பிரேமை அவ

னுக்கு. இதோ, வெட்டிச் சாய்த்துவிட்டான், பட்டத்தரசியாக வேறோர் முகவெட்டுக் காரியைப் பெறத் திட்டமிட்டுவிட்டான்.

நெப்போலியன், தன் 'பிரதாபத்தை'ப் பெரிதாக்கிக் கொள்வதற்காகக் கொடுமை பல புரிந்தான் என்று வரலாற்றுச் சுவடியினர், காரணம் பல காட்டிக் கூறுகின்றனர். அவன் செய்த எல்லாக் கொடுமைகளிலும் ஜோசபைனுக்கு அவன் இழைத்த துரோகம்போன்றது வேறெதுவுமிராது.

ஜோசபைன், அரண்மனையை விட்டு வெளியேற வேண்டிய நாள் குறிக்கப்பட்டுவிட்டது — அதற்கான உத்தரவு பிறந்துவிட்டது.

கண்ணீருக்குக் கட்டுப்படுபவனல்ல, பேராசைப் பேய்க்கு இடமளித்துவிட்ட நெப்போலியன் — பேரரசன்!

நீண்டதோர் அங்கியால் தன்னை முற்றிலும் மறைத்துக்கொண்டாள் அந்த மாதரசி.

அரண்மனைப் பணிப்பெண்கள், அழுத கண்ணினராய், மாடிப்படியில் நின்றனர்; ஏதும் பேசவில்லை, பேசும் நிலையில் இல்லை, செல்கிறேன் என்று கரமசைத்தாள், அரண்மனையை விட்டு வெளியே வந்தாள்.

ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி அவளுடைய பயணத்துக்காகக் காத்துக் கிடந்தது, ஏறினாள், சென்றாள — இதயத்தைத் தந்தவள், இதயமற்றவனுடைய கொடுமையைச் சுமந்துகொண்டு சென்றாள். அந்த நாளை, யார்தான் நினைக்கும்போது, நெஞ்சு நெக்குருகாமல் இருக்கமுடியும்.

ஜோசபைன், மனம் குமுறினாள்— வேறென்ன செய்யமுடியும்—நெப்போலியனை எதிர்த்தோர்தான் பிழைக்கமுடியாதே! அதிலும் இவளோ, பாபம், பெண்பேதை, என்செய்வாள்!

சுடச்சுடப் பேசவும், அவனுடைய சூது மதியினைச் சாடவும், அவளுக்கு உரிமை உண்டு—எனினும் அவள், இதயத்தை அர்ப்பணித்துவிட்டவள், எனவே தாங்கிக்கொண்டாள். கொடுமையைத் தாங்கிக்கொள்வோம், காலம் பாடம் புகட்டட்டும் என்று எண்ணிக்கொண்டாள்போலும்.

புதிய சக்கரவர்த்தினி கொலுமண்டபம் நுழைந்தாள் — ஆஸ்திரிய நாட்டு அரசகுமாரி **மேரி லூசியா** —கொலுமண்டபம்தான் நுழைந்தாள், கொற்றவன் நெஞ்சிலல்ல!

நெப்போலியன் பெற்ற புகழொளியை அவள் தன் மாளிகைக்கு மணிவிளக்காக்கி மகிழ்ந்தாள் — கண்களிலே காதல் ஒளி பூத்திடவில்லை.

அவள் கடமை, பட்டத்தரசியாக இருப்பதுதானே! அதை அவள் வாய்ப்பு இருந்தவரையிலே செய்தாள்.

நெப்போலியனுக்கு இறங்குமுகம் கண்டது — மேரி, அவனை விட்டு அகன்றுவிடத் துணிவு பெற்றாள். நெஞ்சில் இடமளித்திருந்தால்தானே, அகற்றிவிட இயலாது. மேரிக்கு அந்தச் சங்கடம், சஞ்சலம் எழவில்லை.

நெப்போலியனுடைய வீழ்ச்சி, எழுச்சியைவிட வேகமாக உருவெடுத்தது. தொட்டதெல்லாம், கெட்டிடக் கண்டான்; திக்கெலாம் பகை மூண்டிடக்கண்டான்; வெற்றியன்றி வேறு அறியாத படை, நிலைகுலையக் கண்டான்; ரஷிய நாட்டுக் கடுங்குளிர் கொட்டிடக் கண்டான்; கொற்றம் அற்று வீழ்ந்துவிடும் என்று ஆரூடம் கூறினர்; மற்றுமோர் தீரமான தாக்குதல், மகத்தான ஒரு வெற்றி, மீண்டும் புகழொளி ஓங்கும் என்று எண்ணி எண்ணி ஏமாந்தான். நொந்த உள்ளத்துடன் கிடந்தான் — வெந்த உள்ளத்துடன் காட்டு மலர்போல வாழ்க்கையை நடத்திவந்த ஜோசபைன் தன் காதற் கணவர்க்கு வந்துற்ற கதியறிந்து கசிந்து கண்ணீர்மல்கினாள். அவனும் அரசபோகம், அது ஊட்டிய அகந்தை, அதன் காரணமாகப் புதுப்பெண்ணைத் தேடிய அக்ரமம், அந்த அக்ரமத்திட்டத்துக்காக ஆசைக்கினியவளைத் துரத்திய கொடுமை இவைகளை எண்ணினான், கலங்கியறியாதவன், கலங்கினான்.

ஜோசபைனுக்குத் தன் நிலை குறித்துக் கடிதமும் அனுப்பினான்.

அன்று, அரண்மனை மாடியிலிருந்து இறங்கியபோது அடைந்ததைவிட அதிகமாக வருத்தமுற்றாள், ஜோசபைன்.

ஐயோ! அவருக்கா இந்தக்கதி? அவனி புகழப் பவனிவந்தவருக்கா இந்த நிலை? என்றெல்லாம் எண்ணித் துக்கித்தாள்.

பறந்தோடி வருவேன், தங்கள் பக்கமிருந்து பணிவிடை புரிவேன், தங்கள் துக்கத்தைப் பங்கிட்டுக் கொள்வேன், துரையே! என்னால் முடியும், என் இதயம் அதற்கு இடமளிக்கும், ஆனால், உலகம் என்ன கூறும்? உரிமைகொண்டவள் வேறொருவள் இருக்கிறாளே, உதறித் தள்ளப்பட்ட நான், தங்களிருப்பிடம் வருவது முறையாகாதே. இதை எண்ணியே கலக்கம் அடைகிறேன்—என்ற கருத்துப்பட, கடிதம் அனுப்பவும் அந்தக் காரிகைக்கு நற்பண்பு இருந்தது — இவ்வளவு கொடுமைகளை இழைத்தவனிடம், கொண்ட காதலை அவள் மறந்தாளில்லை.

நெப்போலியன், பொறியில் சிக்கிய புலியானான்-பொறி பலமானது மட்டுமல்ல, புலியின் பல்லும் நகமும்கூடச் சுடர் மழுங்கிவிட்ட நிலை.

எல்பா எனும் இடத்தில் நெப்போலியன் இருக்கிறான் —வலிவிழந்து, பொலிவற்று, இருள் சூழ்ந்த நிலையில்.

ஜோசபைன், நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறாள்.

நாளெல்லாம் அவன் நினைப்பு போலும் — இரவெல்லாம் பழைய நாட்கள் பற்றிய கனவுபோலும். மெலிந்துகிடந்தாள், பூங்கொம்பு பட்டுப்போகும் என்பது தெரிந்துவிட்டது.

அங்கு எல்பாவில் நெப்போலியன், மீண்டும் இவன் எழுவது ஏது! அணைந்தது இவன் ஆதிக்கம்! என்று பலரும் கூறிடத்தக்க நிலையில் கிடக்கிறான்.

நெப்போலியன், எல்பா சென்று நான்கு கிழமைகள் நகர்ந்தன— நோய், ஜோசபைனை அரித்துவிட்டது—மனோஹரமான ஓர் மாலை, ஜோசபைன் உயிர் பிரிந்தது.

உயிர் பிரியும்போது, அவளுடைய உள்ளத்திலே நெப்போலியன் நினைவு, கரத்திலே நெப்போலியன் உருவம் பொறிக்கப்பட்ட பதக்கம், உதட்டிலே, "நெப்போலியன்! ...எல்பா...நெப்போலியன்!!"

★

தொடர் சித்திரம்

அறுவடை

5

அரங்கண்ணல்

"**சாக்காடு**-இப்போதோ! இன்னும் சற்றுநேரத்திலோ! அதற்குள் பூக்காடு போன்ற இந்தப் பொன்னவிர் மேனியாளை......?"

"அடபாவி! ஆபத்தில் உன்னைக் காப்பாற்றியவளப்பா, அவள். அதற்கு நீ காட்டப்போகும் நன்றியின் இலட்சணம் இதுதானா?"

"நான் நன்றி காட்டினேன் என்பதற்காக என்னை யாரும் கோயில் கட்டிக் கும்பிடப்போவதில்லை—எந்தக் கவிவாணனும் கவிதைகள் தீட்டி வாழ்த்தப்போவதில்லை. பத்தாண்டுகள் காத்துக் கிடந்தேன்.........பழம் இதோ என் எதிரே!.........அதைச் சுவைத்து ஆத்மசாந்தி தேடிக்கொள்ளப் போகிறேன். அதுதான் எனக்கு முக்கியம்......நன்றி! இந்த மூன்றெழுத்துக்காக வாய்த்த சமயத்தை உதறித் தள்ளிவிடமாட்டேன்..."

"அந்த மாதுசிரோன்மணி மனமிரக்கம் காட்டியிராவிட்டால், மாமிசப் பிண்டமாகக் கொத்தி வீசப்பட்டிருப்பாய், வீதிகளில்! கவனமிருக்கட்டும்!"

"நாளைய தினமும் அந்தக் கதிதானே நேரப்போகிறது எனக்கு...... என்னைக் காப்பாற்றவா போகிறார்கள் இவர்கள்! விட்டுவிட்டு ஓடிவிடப் போகிறார்களே!!"

"அவர்கள் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும்போது உனக்காக என்ன செய்யமுடியும்?"

"அவர்கள் சுயநலம் அவர்களுக்கு! என்னுடைய சுயநலம் எனக்கு!!"

"அட துரோகி..."

"இதை விடக் கடுமையான வார்த்தைகளால் இந்தப் புரட்சிக்காரர்கள் என்னை ஏசிவிட்டார்கள். நான் தர்மம்......நியாயம்...பார்க்கப் போவதில்லை. தங்கச் சுரங்கம் இருக்கிறது எதிரே...தடைசொல்ல யாரும் கிடையாது இங்கே...வேண்டிய மட்டும் அள்ளிக்கொள்வேன். இந்த அழகுஇராணியிடம்நான்எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்த இன்பங்களையெல்லாம் அறுவடைசெய்வேன்..........என்னை ஏமாற்றினானே விடால், பத்தாண்டுகளுக்கு முன்பு, அதற்குப் பழி தீர்த்துக் கொள்வேன்...என்னுடைய பசிதான் எனக்கு முக்கியம்"

*

சிராக்கின் உள்ளத்தில், இப்படி மனப்போர் நிகழ்ந்தது. டாண்டன் அனுப்பிய அவசரக் கடிதம் கண்டதும் விடால், வெளியேறிச் சென்று விட்டான். விபத்து ஏதுமில்லாமல் அவர் வீடு திரும்பவேண்டுமே என்கிற மனக் குழப்பத்துடன் அங்கெல், உள் அறைக்குச் சென்றுவிட்டாள். சிராக்கின் மனமோ, அலைகளைப்போல எழும்பி மோதிக்கொண்டிருந்தது. "விடால், திரும்பி வருவதற்குள் இந்த வெண்ணிலாவைச் சுவைத்துவிட்டு ஓடிவிடவேண்டும்...கொவ்வைச் செவ்வாய்...கோதுமை நிறத்தைப் போட்டிக்கு இழுக்கும் கன்னங்கள்......நான் அணைக்கத் தவம்கிடந்த அந்த அழகு உடல்..." இப்படி எண்ணியவனாக, சோபாவில் உட்கார்ந்து கிடந்த சிராக் பிரபுவின் கண்களில், எதிரே இருந்த மேசையின் மீது கிடந்த கவர் தென்பட்டது. விடால் வெளியேறுவதற்காகப் பெற்றுவந்திருந்த அனுமதிச் சீட்டு அடங்கிய கவர்! அதை அங்கெல் எடுத்துப் பத்திரப்படுத்த மறந்துவிட்டாள்—விடாலும் பரபரப்பில் கவனிக்காமல் சென்றுவிட்டான். அதைக் கண்டதும் சிராக் பிரபுவின் மனதில், புதியதோர் ஆசை உண்டாகலாயிற்று! "ஆகா! என்ன முட்டாள்தனம் செய்ய இருந்தேன். இந்தப் பட்டுப்பூச்சியைத் தொட்டணைத்து சுகம் கண்டால் போதும்; பிறகு துணிவோடு வெறியர்களிடம் உயிரைத் தத்தம் செய்யலாம் என்று எண்ணினேனே! எவ்வளவு அவசரமான முடிவு இது...இந்த அழகுச் சிட்டுடன் நித்யானந்தம் பெறும் வாய்ப்பு தரும் சீட்டு கிடக்கிறதே இதோ!" என்று நினைத்தான்.

விடாலும் அவனது மனைவியும் — என்று அனுமதிச் சீட்டில் எழுதியிருந்ததைப் படித்தான். விடாலும் அவன் மனைவியும்......வேறென்ன? விடாலாகிவிட வேண்டியதுதான் நான்! அவன் வருவதற்குள் எப்படியாவது, இவளுடன் ஓடிவிடவேண்டும்.

5

சிராக்குடைய கண்களில் புதிய நம்பிக்கை பூத்தது. தூக்கு மேடையில் தொங்கச் சென்றவன் துளி தேன் கேட்ட நேரத்தில்........"இந்தா தேனடை! அதோடு உனக்கு விடுதலை அளிக்கப்படுகிறது" என்றால் எப்படியிருக்கும்? சுந்தரக் கிளியுடன் வெளிநாட்டுக்கு ஓடி, நான் சுகிக்க நினைத்த அத்தனை இன்பங்களையும் வட்டியும் முதலுமாய் அவளிடம் வசூலிக்கிறேன்......என்று பேரானந்தமடைந்தான்.

"அதுசரி! விடால், இராணுவ அதிகாரியாயிற்றே.அவன் பெயரைச்சொல்லி நான் எப்படித் தப்ப முடியும்? காவலாளிகளின் கண்களை மறைக்க இராணுவத்தார் அணியும் மேல் சட்டைகூட இல்லையே..."

நம்பிக்கை நாசமாக வேண்டியதுதானா? — மீண்டும் சிந்தனையிலாழ்ந்தான், சிராக். திடீரென்று, அங்கெல் தைத்துக்கொண்டிருந்த சட்டை கவனத்துக்கு வந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்பு, கிழிந்த இடங்களையெல்லாம் தைத்து அவள் அங்கிருந்த சோபாவின் மீது போட்டிருந்த நீலச் சட்டை — குடியரசு வீரர்களுடையது, அது—கிடந்தது. "சபாஷ்!" என்று ஆனந்த பரவசனான சிராக், தன்னுடைய மேலங்கியைக் கழற்றி எறிந்துவிட்டு, அதைப் போட்டுக் கொண்டான். சட்டை கொஞ்சம் பெரிதாயிருந்ததே ஒழிய அதிக வித்தியாசம் தெரியவில்லை. அதன் உள்பையில் கையிலிருந்த அனுமதிச் சீட்டைப் பத்திரப்படுத்திக்கொண்டான். ஒரு தொப்பி இருந்தால், இன்னும் சவுகரியமாயிருக்கும்......... என்று கண்களை ஓடவிட்ட போது, அங்கே ஓரிடத்தில் விடால் விட்டு விட்டுப்போயிருந்த கைத்துப்பாக்கி இருப்பது தெரிந்தது.

கூடாரம் அமைத்துவிட்டோம். கூரிய வாளும் கிடைத்துவிட்டது. இனி, எதிரியைச் சிறைப்பிடிக்க

வேண்டியதுதான் என்கிற எண்ணத்துடன் கைத் துப்பாக்கியை எடுத்தான், சிராக். அப்போது, உள்ளறையில் மூட்டை முடிச்சுகளைத் தயார் செய்யும் வேலையில் கிடந்த அங்கெல், வெளியே வந்தாள்! எதிரே, நீலச் சட்டை அணிந்து நிற்கும் அவனைக் கண்டதும் அவளால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. யார் நிற்பது புதிய போர் வீரன்—என்று திகைத்துப்போனாள். கொஞ்ச நேரம் கூர்ந்து பார்த்த பிறகுதான், யாரென்பது விளங்கிற்று.

"ஏன் அந்தச் சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டீர்........." என்று அங்கெல் கேட்டாள்.

"ஏழை பங்காளன் விடாலுக்கு இருக்கிற சட்டைகள் போதாதா அங்கெல்? தேவைக்கு மேல் வைத்திருப்பவர் சமூக விரோதிகள் அல்லவா, உங்களது ரூசோவின் வாக்குப் படி!"

சிரித்தான், சிராக் பிரபு. அவன் குரலில் தொனித்த கேலி அவளுக்கு சந்தேகத்தை உண்டாக்கிற்று. சாதாரணமாக அவன் பதில் சொல்லியிருந்தால், "சரிதான், பாபம்—மாறு வேடத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆசைப்படுகிறான் போலும். நமக்கென்ன நஷ்டம்?" என்று இருந்திருப்பாள். ஆனால், அவன் அகத்தில் ஏற்பட்டிருக்கும் அலை ஓசைகள் முகத்தில் எதிரொலிக்கின்றனவே!

"சிராக் பிரபுவே! உடை மட்டும் உங்களைக் காப்பாற்றிவிடாது. எல்லையிலிருப்பவர்களிடமிருந்து தப்ப அனுமதிச் சீட்டு இருக்கவேண்டும்..."

புன்னகையொன்றை வீசினான் அவளை நோக்கி.

"எனக்கும் தெரியும் அங்கெல்! அதற்கும் தயாராகத்தானிருக்கிறேன்......"

தைரியமாகப் பதிலளிக்கும் அவனுடைய போக்கு அவளுடைய சந்தேகத்தை இன்னும் அதிகமாக்கிற்று. புலம்பிக்கொண்டிருந்தவன் புன்னகைகளைச் சொரிகிறான்! கவலை தோய்ந்து கிடந்த கண்களிலே புதுத்தெம்பு தெரிகிறது; ஓலக்குரல் எழுப்பிய அவனுதடுகளில் கேலித் தொனி கிளம்புகிறது!...அங்கெலுக்குச் சடேரெனத் தன் கணவன் கொண்டுவந்த அனுமதிச் சீட்டின் கவனம் வந்தது. மேசையைப் பார்த்தாள். அங்கே அது இல்லை, பரபரப்படைந்தவளாய்,

"சீமானே! இங்கே இருந்ததே அவர் கொண்டுவந்த அனுமதிச் சீட்டு? எங்கே அது?"

"இருக்க வேண்டிய இடத்தில் பத்திரமாக இருக்கிறது, தேவி!"

"எங்கே!"

"இங்கே......" என்று சட்டைப் பையைத் தட்டிக்காண்பித்தான் சிராக். அங்கெல், திகைப்படைந்தாள். சீமானின் மனம் எத்திசை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பது கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியலாயிற்று அவளுக்கு. அவனை நோக்கி அடியெடுத்து வைத்தவளாய்,

"ஏன், அதை நீர் எடுத்து வைத்துக்கொண்டீர்?"

"எல்லையில், காவலாளிகள் கேட்பார்களென்று நீ சொன்னாயல்லவா? அதே காரணத்துக்காகத்தான்!"

"என்ன...?"

"ஆச்சரியமடையாதே அங்கெல்... அதற்கான நேரம் இன்னும் வரவில்லை."

"உனக்கு என்ன பைத்யமா..."

"செச்சே! வைத்தியர்களால் போக்க முடியாத வியாதி.........மனோ வியாதிதான் உண்டாகி இருக்கிறது."

"விடாலுக்கு அளிக்கப்பட்ட அனுமதிச் சீட்டு, அது. கவனமிருக்கட்டும். அதைக் காட்டும்போது நீ, அகப்பட்டுக்கொள்வாய்..."

"இங்குள்ள எல்லோருக்கும் தெரியக் கூடிய அளவுக்குப் பெரிய மனிதன் அல்ல விடால். இது எனக்குத் தெரியும்"

"ஆனால், இராணுவ் அதிகாரி..."

"அதற்காகத்தான் இந்த உடை!"

அங்கெலுக்கு, அவன் துரோகம் செய்யத் துணிந்து விட்டான் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. நல்ல பாம்புக்குப் பால்வார்த்த கதையாகிவிட்டது அவளது நிலைமை. ஆரம்பத்திலேயே, பிரபுவுக்கு இடம் அளிக்க விரும்பவில்லை அவளுடைய கணவன்; இரக்கம் காட்டியது அவள். ஆனால், மூர்க்க சுபாவம் கொண்டு நிற்கிறான், பிரபு. அதன் விளைவாக விடாலின் உயிருக்கும் தனக்குமே ஆபத்து வந்துவிட்டது......அனுமதிச் சீட்டு இல்லாமல் எப்படி பாரிஸ் பட்டணத்தைவிட்டு வெளியேற முடியும்? கெஞ்சிக் கேட்கலாம் என்று நினைத்தவளாய், "சிராக் பிரபுவே! நீங்கள் இந்த அனுமதிச் சீட்டைக் கொண்டு போய்விட்டால், விடால் எப்படி தப்பிப் பிழைக்கமுடியும்? கொடுத்துவிடுங்கள்!" என்றாள்.

"இதை எப்படிப் பெற்றானோ அப்படி இன்னொரு அனுமதிச் சீட்டும் விடாலால் பெற முடியும் அங்கெல்!"

"ஒருவேளை கிடைக்காவிட்டால்......?"

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது—என்று நினைத்துக் கொள்வோம்"

"என்ன சொல்லுகிறீர்—பிரபுவே! என்ன சொல்லுகிறீர்"

"அனுமதிச் சீட்டு கிடைக்காவிடில், அவனைக் கொன்றுவிடுவார்கள். அவன் உயிர் போய்விடும். விதவைக் கோலத்தில் காட்சி அளிப்பாய். என் கண்களுக்கு விருந்தாகத் தென்படுவாய்......"

திடுக்கிட்டுப் போய்விட்டாள், அங்கெல். சிராக், அங்கிருந்து தப்பமட்டுமல்ல — பழிவாங்கவும் துணிந்துவிட்டான் என்பதை அறிந்தபோது, அவனை ஓங்கி அறையலாமா என்றிருந்தது அவளுக்கு. அங்கமெல்லாம் பற்றிக்கொண்டு எரியலாயிற்று.

"அடபாவி! பச்சாதாபப்பட்டு உன்னைக் காப்பாற்ற உதவிய எனக்கு நீ செய்யும் கைம்மாறா இது? கடுகளவு கூட ஈவு இரக்கம் அற்றவனைப் போலப் பேசுகிறாயே! கணவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தாயல்லவா நீ...கணப்பொழுது தாமதித்தாலும் எங்களுடைய உயிர் தப்பாது என்பதை. இருந்துமா, இந்த முடிவுக்கு வந்தாய். உனக்குச் செய்த உதவிக்குக் கிடைக்கும் பரிசு இது தானா? பாவி! படுமோசக்காரா!"

"ஆலோலம் பாடுவதுபோலிருக்கிறது அங்கெல்—கோபத்தால் சிவப்பேறும் உன் கண்களையும், ஆத்திரத்தால் துடிக்கும் அந்த அழகுவர்ண உதடுகளையும் பார்க்கும்போது..."

"என் இதயம் எப்படித் துடிக்கிறது என்பதையும் பார்த்துத் தெரிந்துகொள்..." என்று அவனை நோக்கிப் பாய்ந்தாள் அங்கெல். மிருகத்துடன், மின்னல் கொடியான தன்னால் சண்டைபோட இயலுமா என்பது கூட அவளுக்குத் தெரியவில்லை. அவனோ, அசையவில்லை. பேசாமல், பைக்குள் கையைவிட்டு துப்பாக்கியை எடுத்து நீட்டினான், "அசையாதே! அங்கெல்....உன்மீது நான் கொண்டிருக்கும் ஆழ்ந்த காதலைக் காட்டித் தெரிவித்துக்கொள்ளுகிறேன். போர்! போர்!! என்று சதா அலையும் இந்த விடாலைவிட, அருமையாக வைத்துக் காப்பாற்ற முடியும் என்னால். இந்த அனுமதிச் சீட்டை வைத்துக்கொண்டு நீயும் நானும் தப்பிவிட முடியும்...எங்காவது ஓடிப்போய் இன்பமாக வாழ்வோம். இதற்கு நீ சம்மதியாவிடில் உன்னுடைய வாழ்வும் அவனுடைய உயிரும் நிச்சயம் நாசமாகும், இரண்டில் எது வேண்டும் என்பதை நீயே தீர்மானித்துக்கொள். வாழ்வா? சாவா? சொல்!"

ஒருகணம், எதுவும் பேசவில்லை அவள். எப்படிப்பட்ட இக்கட்டில் மாட்டிக்கொண்டு விட்டோம் என்பது தெளிவாகத் தெரிந்தது. கடும்புலியிடமிருந்துகூடத் தப்பிவிடலாம்...... காமுகனிடமிருந்து எப்படித் தப்ப இயலும் காரிகையரால்? விடாலோ, இன்னும் வரவில்லை. அவர் வரும் வரையில் எப்படியாவது சமாளித்துக் கொண்டால் போதும். எப்படிச் சமாளிப்பது?

"சொல் அங்கெல்! சொல்!! நீ விரும்புவது என்ன வாழ்வா-சாவா..."

அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையைத் தொங்கப்போட்டுவிட்டாள், அங்கெல்.

"என்ன சொல்கிறாய்?"

"இனிமேல் என்ன சொல்லப் போகிறேன்..."

"அப்படியானால் என்னுடன் கிளம்ப சம்மதிக்கிறாயா..."

"ஒரு உறுதிமொழி வேண்டும்..."

"ஒன்றென்ன ஓராயிரம் தருகிறேன்......"

"எப்போதும் என்னைக் கைவிட்டு விடக்கூடாது..."

"கனியைவீசியெறியக்கசடன்கூடத் துணியமாட்டான் அங்கெல்..."

"காம போதையில் கனியாகத் தெரிவது காலை மலர்ந்ததும் சருகாகத் தெரியுமாமே பிரபுக்களுக்கு!"

"இருக்கலாம்...ஆனால் எனக்கு நீ அப்படிப்பட்ட கனியல்ல! எட்டாத கனி...யாருக்கும் கிட்டாத கனி...இன்பக் கனி..."

"இப்படித்தான் காரியம் ஆகிற வரையில் என்னிடம் கொஞ்சினார் விடால்......"

"அப்படியென்றால் இப்போது அவன் உன்னைச் சரியாக நடத்துவதில்லையா....."

"அதையேன் கேட்கிறீர்......அது ஒரு பெரிய கதை. யாரோ ஒருத்தியுடன்....."

"நான் அப்போதே நினைத்தேன்! என்னைக் காப்பாற்ற நினைத்தாயே அப்போதே நினைத்தேன்!"

"என்ன நினைத்தீர்?"

"அவனிடம் நீ சுகமாக இருக்க முடியாதென்று...."

"என்ன இருந்தாலும் பெரிய மனிதர்கள் மூளையென்றால் அதற்கு இருக்கும் விசேஷமே அலாதிதான்...."

"பேசிக்கொண்டேயிருந்தால் நேரம்தான் வீணாகிறது....."

"என்ன செய்யவேண்டும்....."

"சொல்லவா! அல்லது...." என்று கூவிக்கொண்டே அவளை நோக்கித் தாவினான், சிராக். அவனுடைய இதயத்தில் எரிந்துகொண்டிருந்த ஆசைத் தீ கண்கள் வழியாய் வெளி வந்துகொண்டிருந்தது. அவளைப் பிடிக்கத் தாவினான்......அவன் கைக்கு அகப்படாமலிருக்க விளையாட்டுக் காட்டுவதுபோல சாகசம் செய்ய முயன்றாள் அங்கெல்....தாவிப்பிடித்து விட்டான். சுவரோரம் கொண்டுபோய் நிறுத்தி....உதடுகளோடு உதடுகளைக் கொண்டுபோய்.....

"சட்!" உதறித் தள்ளினாள், அங்கெல். பிரபுக்கு எதுவும் புரியவில்லை.

"என்ன அவசரம்? கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டுபோய் விடப்போகிறது!"

"உள்ளத்தை அடக்க முடியவில்லையே—உயிரே!"

"இந்த வீட்டில் எதுவும்கூடாது.... இங்கிருந்து வெளியேறிய பிறகு..."

"சரி! கிளம்பு...." என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், கீழே வீதியில் ஒரு 'கோச்சு' வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. அதிலிருந்து யாரோ இறங்குவதும், கீழே உள்ள கதவுகளைத் தட்டுவதும் கேட்டது. சிராக்குக்குத் திகிலும், ஏமாற்றமும் உண்டாயிற்று. ஒருவேளை விடால் வந்துவிட்டானோ! — என்று எண்ணினான். அதே எண்ணம் அங்கெலுக்கும் ஏற்படவே 'அப்பாடா! ஆபத்திலிருந்து தப்பிவிட்டோம்' என்று பெருமூச்சு விட்டாள். சிராக் பிரபு, அவசர அவசரமாக சன்னலைத் திறந்து அதன் வழியாக எட்டிப் பார்த்தான். கீழே, 'கோச்' நின்று கொண்டிருந்தது. வண்டிக்காரன் அங்கு நின்றபடி, "யார் வீட்டில்? விடால் வீடுதானே இது! விடால்! விடால்!!" என்று கத்திக்கொண்டிருந்தான். அதைக் கேட்டதும், விடால் அல்ல வந்தது. அவன் வரச்சொன்ன வண்டி என்பது விளங்கிவிட்டது. வேறென்ன வேண்டும் சிராக்குக்கு?

"அங்கெல்! கிளம்பு....சீக்கிரம்."

நம்பிக்கை தீபம் அணைந்த நிலையில், எதுவும் புரியாதவளாயிருந்தாள் அங்கெல்;

"தாமதிக்காதே....அவன் வந்து விடப் போகிறான். புறப்படு."

என்ன செய்வதென்று புரியவில்லை அவளுக்கு, "கொஞ்சம் இருங்கள்.... என்னுடைய பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொள்கிறேன்."

"சரிதான்போ! அதற்குள் நேரம் சரியாகிவிடும். அவசரமான நேரத்தில் அதற்காகவா தாமதிக்க முடியும்? வா! வா!! பார்த்துக்கொள்ளலாம்..."

என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை அவளுக்கு. அவளுடைய பதிலுக்காகவும் சிராக் காத்திருக்கவில்லை. கையைப் பிடித்து பரபரவென்று இழுத்துக்கொண்டு இறங்கலானான். மாடிப்படிகளில் இறங்க நேர்ந்தபோது, அங்கெல் திமிறினாள். "கொஞ்சம்விடு......இன்னும் சிறிது நேரம் பொறுத்துக் கிளம்பலாம்" என்றாள். "எதற்கு? விடால் வந்து நம் இருவரையும் பிடித்துக் கொள்ளவா! வா, வா" என்று இழுத்தான்.

'முடியாது' என்று மறுத்தால் அனுமதிச் சீட்டுடன் அவன்தப்பிவிடுவான், பிறகு, தனக்கும் கணவருக்கும் ஏற்படக்கூடிய கதியை நினைத்தாள். 'சரி! கீழே போனதும் வண்டிக்காரனிடம் சொல்லுவோம்.....இல்லையென்றாலும் அதற்குள் பையிலிருந்து எடுக்க சந்தர்ப்பம் கிடைக்காதா...' என்று எண்ணியவளாக, "ஆமாமாம்! அவர் வருவதற்குள் போய்விடவேண்டும்... போவோம்" என்று படிகளில் இறங்கலானாள். அவள் தாமதிப்பதைக் கண்டதும், சிராக்குக்கு சந்தேகம் ஏற்பட்டது, ஆகவே, பையிலிருந்த துப்பாக்கியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டான்.

"பார்த்தாயா, அங்கெல்! உன்மீது கொண்டிருக்கும் ஆசை என்னை இப்படிச் செய்யத் தூண்டுகிறது. என்னைக் காண்பித்துக் கொடுக்க முயன்றால் இது வெடிக்கும்.....ஆமாம்"

அப்படியென்றால் என்னை நீங்கள் நம்பவில்லையா, பிரபுவே...."

"ஆயுள் முழுதும் நம்பத் தயாராயிருக்கிறேன் — ஆனால் எல்லையைத் தாண்டும் வரையில் என் போக்குப்படி என்னை விட்டுவிடு"

ஏதும் பேசாதவர்களாய் படியிலிறங்கி, வீதிக்குவந்து சேர்ந்தார்கள் இருவரும். அந்தக் குறுகிய வீதியில், நிறுத்தப்பட்டிருந்தது, கோச். இவர்களைக் கண்டதும், "அப்பாடா! வந்துவிட்டீர்களா....." என்றான், வண்டிக்காரன். அங்கெலின் நம்பிக்கை அஸ்தமித்தது. அவனுக்குத் தன் கணவனை அடையாளம் தெரியாது என்பது தெரிந்தது. அவன் கோச்சின் முன்புறத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டு, 'ஓட்டட்டுமா?' என்றான்.

சிராக்கு, கதவைத் திறந்துகொண்டு கோச்சுக்குள் ஏறி உட்கார்ந்தான். அங்கெலுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. அப்போதும் அவள் கண்கள் அவனுடைய சட்டைப் பையின் பக்கமே சென்றன. அதைப் புரிந்துகொண்ட சிராக், ஒரு கையால் அந்தப்பக்கத்தைப் பிடித்துகொண்டு; இன்னொரு கையில் துப்பாக்கியை பிடித்தவண்ணம் கதவைத் திறந்தான். வேறு வழியில்லாததால், அங்கெல் ஏறினாள். அப்போதும், அவளுக்கு ஒரு நம்பிக்கை—எல்லை செல்வதற்குள் எப்படியாவது அனுமதிச் சீட்டைக் கைப்பற்றிவிடலாமென்று! ஆனால், சீமானு, விடுவான்? அவன் வெகு சாக்கிரதையாக இருந்தான்.

"என்னங்க! ஓட்டட்டுமா...."

"ஓட்டு.......வேகமாக ஓட்டு. வழி தெரியுமல்லவா?"

"வழி எல்லாம் நீங்கள் சொல்லியனுப்பிய ஆள், என்னிடம் தெரிவித்திருக்கிறான்" என்றான் வண்டிக்காரன். குதிரை, பாய்ந்து ஓடலாயிற்று— அதற்கென்ன தெரியும் உள்ளே தவித்துக்கொண்டிருக்கும் அணங்கைப்பற்றி!!

(வளரும்)

மலர் 14] 29–1–56 [இதழ் 30

நல்ல முடிவு

"இன்ஷூரன்ஸ் கம்பெனிகளை, சர்க்காரே எடுத்து நடத்தப்போகின்றனராம். மாகாண சர்க்கார்கள் அல்ல! டில்லியார்தான்!

இந்த முடிவை அண்மையில் அறிவித்திருக்கிறார் டில்லி நிதியமைச்சர் தேஷ்முக்.

இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், பாங்குகள் என்பவைகளை ஏற்படுத்திக்கொண்டு, ஆலையரசர்கள் அடிக்கும் கொட்டத்தை நாடு அறியும். பணத்தோட்டங்கள், இந்த இரு துறைகளும்! இவைகளில், தனிப்பட்ட இன்ஷூரன்ஸ் கம்பெனிகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போவதால் அவர்கள் வசம் 149 இந்தியக் கம்பெனிகளும் 16 வெளிநாட்டுக் கம்பெனிகளும் வரும். அதனால் மொத்தம் 352½ கோடி ரூபாய், சர்க்காரின் பாதுகாப்புக்கு வரும்.

டால்மியாவின் பாரத் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் ஏற்பட்ட திருவிளையாடல்களை அறிவோம் நாம்! கடந்த ஆண்டில் சுமார் 25 கம்பெனிகள், கலைக்கப்பட்டதாம் ஊழல்களால்!

எப்போதோ செய்ய வேண்டிய காரியம்—எனினும் அப்போதெல்லாம் தேசியமயமாக்கமாட்டோம் என்று சொல்லி வந்தவர்கள்—இப்போதாவது நடவடிக்கை எடுக்க முன்வந்தது குறித்து மகிழ்கிறோம்.

அதே சமயத்தில் இன்னொரு அச்சமும் ஏற்படாமலில்லை—எடுத்துக்கொள்ளும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளை நல்ல முறையில் நிர்வகிக்க இவர்களுக்குச் சக்தியுண்டா என்பதுதான்! ஏனெனில் சிறு பஸ் போக்குவரத்து முதல் ஒவ்வொரு துறையும் ஒரே ஊழல் மயமாகத்தானே இருக்கிறது!! ★

5–ம் பக்கத் தொடர்ச்சி

ரும் ம. பொ. சி. யுமல்லவா சந்தித்தனர்—பிறகுதானே நாம், பரவாயில்லை—என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு அந்த மகத்தான சந்திப்பின்போது பேசப்பட்டவைகள் பற்றி அவர்கூறக் கேட்டு இன்புற்றேன்.

தமிழகத்துக்கு உரிமையான பகுதிகளை மீட்பதற்கான கிளர்ச்சி அவசியம் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு பெரியார் ஒப்புதலளித்துப் பேசினார் என்று கூறினார்—களிப்புற்றேன்—அந்தக் களிப்புப் பன்மடங்கு வளரும் வகையில், இந்தச் சந்திப்புக்குப் பிறகு, பெரியார் பல இடங்களில் பேசினார்.

எனினும், 27ந் தேதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பெரியார் கலந்துகொள்ளவில்லை; காரணம் முன்னாளே காட்டினார்.

அவர் காட்டிய காரணங்களின் தன்மை பற்றியோ உண்மை குறித்தோ ஆராய்ச்சி நடத்துவது, தேவையுமல்ல, என் வழக்கமுமல்ல—ஆனால் ஒன்று மட்டும் கூறுவேன, அவர் காட்டிய காரணங்கள், அன்றைய கூட்டத்துக்கு அவர் வராததற்குப் போதுமானவையாகாது.

மேலெழுந்தவாரியாக நான் கேள்விப்பட்டதும், தினத்தந்தி ஆசிரியர் ஆதித்தன் என்னிடம் நேரில் சொன்னதும் என்னைத் தூக்கிவாரிப் போட்டது—நீ வருவதால்தான் பெரியார் வரவில்லை என்றார் — தம்மிடமே சொன்னதாகச் சொன்னார்-ஆனால் சொன்னவர் தினத்தந்தி!

நான் அவரிடம் சொன்னேன், நான் இங்கு வருவதுதான் பெரியார் இங்கு வராததற்குக் காரணம் என்று எப்படிக் கூறமுடியும். நாளைக்கு 28ல், வேறோர் இடத்தில் மற்றோர் பொதுப் பிரச்சினை குறித்து நடைபெற இருக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் நான் கலந்துகொள்கிறேன் —பெரியாரும் பெருந்தன்மையுடன் அங்குவரச் சம்மதம் தந்திருக்கிறாரே, அதுமட்டும் எப்படிச் சாத்தியமாகிறது என்று கேட்டேன்.

காரணம் அதுமட்டுமல்ல, தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை பற்றி மட்டுமே ம. பொ. சி.யின் கூட்டத்தில் கவனித்துக்கிளர்ச்சிக்கு வகை காண முன் வருகிறார்கள். பெரியாரோ, தம்முடைய ஒத்துழைப்பும் துணையும் தரப்பட வேண்டுமானால், வேறு சில பிரச்சினைகளையும் போராட்டத்துக்கானதாக உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும என்று கருதுகிறார் — அதன்படி இங்கே காரியம் நடைபெறாது என்று எண்ணியே வரவில்லை என்று என்னையும் பெரியாரையும் ஒருசேரத் தோழமை கொள்ளும் நண்பர் கூறினார்.

இதுவும் பொருத்தமாகப் படவில்லையே! நாளையத் தினம் நடைபெற இருக்கும் கூட்டத்திலும், ஒரே ஒரு பிரச்சினை மட்டும்தான் கவனிக்கப்பட இருக்கிறது; அங்கு பெரியார், தம்முடைய மற்றப் பிரச்சினைகளை வலிவுறுத்துவதாகக் காணோமே என்றேன். எனக்கென்ன தெரியும் என்றார் நண்பர்; எனக்குப் புரிந்தது—புன்னகையும் பிறந்தது.

தம்பி! 27ந் தேதி கூட்டத்தில் கலந்துகொண்ட மாபாவிகளிலே பலர், 28ந் தேதி கூட்டத்தில் கலந்துகொண்டனர்; அங்கு பெரியார், தட்டாமல் தயங்காமல் வந்திருந்து, தமது சீரிய யோசனையை வழங்கினார்.

ம. பொ. சியும் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனும், இரத்தினம் M. L. Aயும், பி. டி. இராஜனும் சுயம்பிரகாசமும், 27லும் 28லும் கலந்து கொண்டனர்; நானும், இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொண்டேன்.

பெரியார் 27ல் வரவில்லை, 28ந் தேதிய கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

27ந் தேதிய கூட்டம் தேவிகுளம் பீர்மேடு சம்பந்தமாக.

28ந் தேதிய கூட்டம் ஆங்கிலமே இந்திய யூனியனின் அதிகாரபூர்வமான மொழியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவதற்காக.

இந்த ஒரு பிரச்சினைக்காக 'இதுகளோடு, நான் கலந்து பேசுவதா என்று கேட்ட பெரியார், மொழிப் பிரச்சினை மட்டும்தான் என்று 28ந் தேதிய கூட்டம் நடத்தப்பட்டபோதிலும், அதிலே 'இதுகள்' இருந்தபோதிலும், வந்தார்!

நான் திகைத்துப் போனேன்—உன் நிலை எப்படியோ?

ஒன்று மறந்தேனே கூற, 28ந் தேதிய கூட்டத்தில் இராஜகோபால

ஆச்சாரியாரும், திருப்புகழ்மணி கிருஷ்ண சாமி ஐயரும், K. S. இராமசாமி சாஸ்திரி களும், வெங்கட்ராம ஐயரும், வந்திருந் தனர். 27ல் இந்த 'ஜமா' இல்லை!

எப்படியோ ஒன்று தம்பி! இரண்டு கூட்டங்களிலும், நல்ல பலன் விளைந்திருக்கிறது; இதிலே, நமது மூலாதாரக் கொள்கைக்குக் கேடோ, நமது கழகத்தின் கண்ணியத்துக்கு மாசோ ஏற்படக் கூடியது எதுவும் ஏற்படாதது மட்டுமல்ல, நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பல மான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொது முயற்சிகள் ஏற்பட்டால், நாம், தடைக்கல்லாக இருக்க மாட்டோம், என்பதை எடுத்துக் காட்டும் நல் வாய்ப்பும் கிடைத்தது!

27ல், தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை என்ற பெயரில், தமிழரின் உரிமைப் பிரச்சினை, மொழிவழி அரசுப் பிரச்சினை, அதை வெட்டி வீழ்த்தக் கிளம்பும் தட்சிணப் பிரதேச யோசனையை வீழ்த்தும் பிரச்சினை, சென்னைக்குத் தமிழ்நாடு என்று உரிய பெயர் பெறும் பிரச்சினை இவைகளுக்கெல்லாம்,

தி. மு. க.
தமிழரசுக் கழகம்
கம்யூனிஸ்டு கட்சி
சோஷியலிஸ்டு கட்சி
பிரஜா சோஷியலிஸ்டு
திராவிட பார்லிமெண்டரி கட்சி
ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன்
வடக்கெல்லை பாதுகாப்புக் கமிட்டி
திரு. கொச்சி இணைப்புக் கமிட்டி
எழுத்தாளர் சங்கம்
நடிகர் சங்கம்
புதுவை முன்னணி
ஜஸ்டிஸ் கட்சி

ஆகிய இத்தனை அமைப்புகளின் தலைவர்கள் ஒப்பமளித்தனர், உடனிருந்து பணியாற்ற ஒருமனப் பட்டனர், செயலாற்றக் குழு அமைக்கப்பட்டது, பி. டி. இராசன் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்; ம. பொ. சி. அமைப்புச் செயலாளராகவும், நமது என். வி. நடராசன், ப.ஜீவானந்தம், அந்தோனிப் பிள்ளை, சுப்ரமணியம் ஆகியோர் செயலாளர்களாகவும் உள்ளனர்.

இந்தச் செயற்குழுவில் நமது பொதுச்செயலாளர் இருந்து பணியாற்ற இசைவு தந்தார்,

இதுபோன்றதோர் 'கூட்டணி' இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டதில்லை. தாயக மீட்புக்கு, அவரவர் தத்தமது கடமையைச் செய்ய, காணிக்கை தர, தயாராகிவிட்டனர்.

இதிலே இடம் பெற்றுள்ள எந்தக் கட்சியின் உருவமோ முறையோ, வேலைத் திட்டமோ கொள்கைகளோ, இந்தக் கூட்டினால், குலையும் நிலையில் ஏதும் இல்லை.

தேவிகுளம் பீர்மேடு என்ற குறிச் சொல்லால் இன்று உணர்த்தப் பட்டுவரும் மொழிவழி அரசுத் திட்ட வெற்றிக்கான வரையில் கூடிப் பணியாற்றுவது என்பதே நோக்கம்.

இல்லையேல், பி. டி. இராசன் தலைவர், ம. பொ. சியும் ஜீவானந்தமும் செயலாளர்கள் என்று ஓர் அமைப்பு ஏற்பட்டிருக்க முடியுமா.

தம்பி! அன்று நான் அனைவரிடத்திலும் கண்ட உள்ளத் தூய்மை என்னை உவகைக் கடலில் ஆழ்த்திற்று! ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டிருந்தவர்கள் — எவ்வளவோ ஏசினோம், ஏசப்பட்டிருக்கிறோம்—எனினும், அன்று நாட்டுக்கு வந்துற்ற பெருங் கேட்டினை நீக்கிட நாமனைவரும், ஓர் அணியில் நின்றாகவேண்டும் என்று ஒவ்வொருவரும் பேசியது கேட்டு, உளம் பூரித்தேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்—என் உள்ளத்தில் எப்போதும் இருந்துவருபவர் — நீண்ட நாட்களாகக் காணாதிருந்தேன்—அவருக்குக்கூட அல்லவா என்னிடம் கோபம், கசப்பு — அவர் அன்று அங்கு அமர்ந்து, அரசோச்சும் மன்னருக்கு பழந்தமிழ்ப் புலவர்கள் பேராண்மையுடன் அறிவுறுத்திய பான்மைபோல், அவையினருக்கு, செயல்! செயல்! உடனடியாகச் செயல்! உரிமை காத்திடும் செயல் என்று பேசியதை நான் என்றும் மறந்திட முடியாது

இந்தக் கூட்டு முயற்சியைக் குறைகூறிப் பேசுவோரும் எழக்கூடும் — நாட்டிலே எதற்குத்தான் வாய்ப்பு ஏற்படவில்லை. எனினும், ஒன்று நாடு அறியும், பெரியதோர் பிரச்சினை நம்மை நோக்கி நிற்கும் போது, ஒதுங்கி நின்றோம், ஒற்றுமைக்கு இணங்க மறுத்தோம் என்ற குற்றச்சாட்டு நம் கழகத்தின்மீது ஏற்படாத வகையில் நமது பொதுச்செயலாளர் நடந்து கொண்டார்.

இந்தக் கூட்டணி அமைந்ததால், தத்தமது கட்சி கலைக்கப் பட்டு, கொடி அகற்றப்பட்டு, கொள்கை தகர்க்கப்பட்டுப்போகும் என்பதல்ல. ஏமாளியும் அங்ஙனம் எண்ணத் துணியமாட்டான். ஒவ்வோர் கட்சியும் இந்தப் பொதுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், தத்தமது சக்திக்கேற்ற வகையிலும் அளவிலும் பணியாற்றி, அந்தக் கூட்டுச் சக்தியின் பலனாக, நாட்டுக்கு வந்துற்ற கேட்டினை நீக்குவர் என்பதுதான் பொருள்.

தம்பி, ஏற்பட்டுள்ள உறவு, முன்னாளில் இருந்து வந்த கசப்புகளையும் மறந்திடச் செய்யும் வகையில் அமைந்திருக்கிறது.

அப்படிச் செய்தவர்! இப்படிப் பேசியவர்!—என்று இருதரப்பிலும் பேசிடுவது, அவரவர்க்கு தத்தமது அமைப்பினிடம் உள்ள பாசத்தை முன்னிட்டுத்தானே!—இனிக் கூட்டு முயற்சி மூலம், பல்வேறு அமைப்புகளும், பகையின்றிப் பூசலற்று, ஏசலை விடுத்து கூடுமான போதெல்லாம் ஒன்றுபட்டுச் செயலாற்றவும், கருத்து வேறுபாடு எழும் பிரச்சினைகளில், தனித்து நின்று, ஆனால் ஒரு அமைப்பை மற்றோர் அமைப்பு தாழ்த்திக்கொள்ளாமலும்,அவரவர் துறை நின்று பணியாற்று தலை பண்புடைமை, அறிவுடைமை என்பது பற்றி, நானும் நண்பர் ம. பொ. சியும் பேசிய போது, ஏன் அத்தகைய அன்புச் சூழ் நிலையை அமைத்தல் கூடாது-நீண்டகாலப் பகையும் ஒன்றை ஒன்று அழித்திடத்தக்க முறையும் கொண்ட, திராவிடர் கழகமும் கம்யூனிஸ்டும், கடந்த பொதுத் தேர்தலிலே, காங்கிரசை முறியடிக்க ஒன்றுபட்டுப் பாடுபடவில்லையா? இன்று காமராஜர் நமது இனப் பாதுகாவலர் என்ற காரணம் காட்டிப் பெரியார் அவருக்குப் பெருந் துணைவராக இல்லையா, அதே போல, மற்றவர்கள் -ண பறிந்து நடந்துகொள்ளவா முடியாது—நிச்சயம் முடியும் என்றே எனக்கும் தோன்றிற்று, ம. பொ. சி.யும் அதனையே உற்சாகத்தோடும் உள்ளன்போடும் கூறினார். கொஞ்ச நஞ்சம் அதிலே பயமோ சந்தேகமோ இருந்தாலும், 28ந் தேதி ஆச்சாரியாரும் பெரியாரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்ட 'அன்பினை'ப் பார்த்தபோது,இஃதன்றோ,

தமிழகம் காணவேண்டிய காட்சி என்று தோன்றிற்று.

பார்ப்பனர்களைப் பூண்டோடு ஒழிக்கவேண்டும். பார்ப்பனீயத்தை ஒழிக்கிறேன் என்று இதுகள் பேசும்! அது தப்பு, தப்பு, சுத்தத் தப்பு.

அக்கிரகாரம் கொளுத்தப்பட வேண்டும். இப்போது செய்துவிடாதீர்கள்—நாள் தருகிறேன்—என்று பெரியார் பேசுவது, ஆச்சாரியாருக்கோ, இராமசாமி சாஸ்திரியாருக்கோ, கிருஷ்ணசாமி ஐயருக்கோ தெரியாதா, தெரியும்.

இவர்கள் பார்ப்பனர்கள்— பார்ப்பனத் தலைவர்கள் என்பது பெரியாருக்குத் தெரியாதா; பேதையும் அங்ஙனம் கூறான். அன்று ஆச்சாரியார் சொன்னார்,

"உலகத்திலே உள்ள அவ்வளவு பேதங்களும் எங்கள் இருவருக்கிடையில் உண்டு; மறைத்துப் பயனில்லை; என்றாலும் இந்த ஒரு விஷயத்தில் நானும் அவரும் ஒத்துப் போகிறோம்; ஒரே அபிப்பிராயம்தான்" என்று பேசினார்.

பார்ப்பனச் சூழ்ச்சி என்று கூறிவிடலாம், அவர் மட்டுமே இப்படிப் பேசி இருந்தால். பெரியார் பேசியது என்ன தெரியுமா, தம்பி!

"என் அன்புக்குரிய ஆச்சாரியார்,
நண்பர்,
தலைவரென்றே சொல்லலாம்"

என்று துவங்கி,

இந்த ஒரு விஷயத்தில் நானும் அவர் கருத்தைப் பூரணமாக ஆதரிக்கிறேன்" என்றார்.

தம்பி! இது 28! 27ல், நாமும், ம.பொ.சி.யும், ஜீவாவும் அந்தோனிப் பிள்ளையும், பாரதிதாசன் அமரும் அவையில், பி. டி. இராஜன் நடத்திச் செல்லும் குழுவில் இருக்கச் சம்மதித்தது, 28க்கு முன்னறிவிப்பு போல் இருக்கிறதல்லவா. ஆமாம், இனிக்கவும் செய்கிறது.

28ல் ஏற்பட்ட கூட்டு, ஆங்கிலமே பொதுமொழியாக இருத்தல் வேண்டும்என்று மத்யசர்க்காருக்கு பல கட்சியினர் கூடிக்கூறி, அதைப் பெறுவதற்கு வழி காண ஏற்பட்டது.

27ல் ஏற்பட்ட கூட்டு, நாம் பெற வேண்டிய எல்லைகளைப் பெறவும், சென்னைக்குஉரிய தமிழ்நாடு என்ற பெயர் கிடைக்கவும், தட்சிணப் பிரதேசம் என்ற பேய்த் திட்டத்தை ஒழித்துக் கட்டவும் ஏற்பட்டது.

28-ன் உடனடி விளைவு, ஆங்கிலமே பொதுமொழியாதல் வேண்டும் என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவிப்பது.

அதில் நாங்கள் அனைவரும் இசைவு தந்திருக்கிறோம்.

27ந் தேதி செய்த முடிவு, தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை சம்பந்தமாக, மத்திய சர்க்கார் மேற்கொண்ட போக்கினைக் கண்டிக்கும் வகையில் பிப்ரவரி 20ல் நாடெங்கும் பொது வேலை நிறுத்தம் செய்வது என்பதாகும்.

தம்பி! சர்க்கார் எத்தகைய கடுமையான முறைகொண்டும் நம்மை ஒடுக்கத் தயாராக இருக்கிறது. இப்போதே அறிவகத்தைச் சுற்றிப் போலீஸ் வட்டமிட்டவண்ணம் இருக்கிறது.

அந்தத் 'தட்டும் குவளையும்' துடியாய்த் துடிக்கிறதோ என்னவோ, யார் கண்டார்கள்—சிறையில்!

எது எப்படி நேரிடினும் பிப்ரவரி 20, வெற்றிகரமாக, அமைதியாக, பலாத்காரமற்ற வகையில் நடைபெற்றாக வேண்டும்.

தம்பி! தயார்! தயார்!!

அன்பன்,

அண்ணாத்துரை.

அன்பர் மீனாட்சி......!

ஏன் தான், இப்படியாகிறார்களோ தெரியவில்லை! திருவாவடுதுறை ஆதீனத்தரசு கூட்டிய திருமந்திர மகாநாட்டின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்த, திருவாளர் தெ. போ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், சிலபல மொழிந்திருக்கிறார். சேரன் கொற்றமும், சிலம்பின் அழகும், மேகலையின் சிறப்பும், குறளின் பெருமையும் குறித்துப் பேச வேண்டியவர்! பெருமைக்குரிய தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் அமர்ந்திருந்தவர்! தமிழரசுக் கழகத்தின் மாநாடுகளிலும், அவர் கலந்து கொள்வதுண்டாம்! தமிழால், பெருமை பெற்றவர்— தமிழால் பெருமைபெற வேண்டிய அருகதையும் உடையவர். அத்தகையவர், அந்த மாநாட்டிலே திருவாய் மலர்ந்தருளியிருக்கும் செய்திகளை ஏடுகளில் படிக்கும்போது, இதயம் பெருமூச்சால் விம்முகிறது.

*

கூனிக்குறுகி, குழிவிழுந்த கண்களுடன் 'இன்றோ நாளையோ' என்றிருக்கும் அடுத்த வீட்டு கிழவிக்கு, ஆடையும் அணிகலன்களும் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்து 'அணியுங்கள் இதை!', என்று தெரிவித்தாலும், ஒருவன்! அப்படி அவள் அணிந்திருப்பதைக் காண ஊராரே ஓடிவாரீர்—இந்த ஒய்யாரக் காட்சியைக் கண்டு களிக்கவாரீர்— ஆகா, என்னே அழகு, என்னே அழகு, என்றும் கூவினாலும்!!

*

மீனாட்சிசுந்தரனார், கிழவியைத் தூக்கி மனையில்வை என்று சொல்லியவனையும் மிஞ்சுகிறார்! பாடையில் ஏறிவிட்ட பிணத்தைக் கொண்டு வந்து மணவறையில் அமர்த்த வேண்டுமென அறிவிக்கிறார்!!

* *

டில்லியிலிருந்து வெளிவரும் கார்டுகளில், இந்தி அரசோச்சுகிறது! ரூபாய் நோட்டுகளில் இந்தி! இராணுவத்தில் இந்தி! எத்துறையிலும் இந்தி! இதுபற்றி, எண்ண வேண்டியவர், இதயம் துடிக்க வேண்டியவர்கள், தெ.போ.மீனாட்சி சுந்தரம் போன்றார். ஏனெனில், தமிழால் வாழ்பவர்கள்! தமிழால் பெருமை பெற்றவர்கள்! "அட, டில்லி சர்க்காரே! அந்நியன்கூட, சலுகை தருகிறான். சொந்த சர்க்கார் என்று கூறும் நீ, அதைக்கூடத் தரமறுக்கிறாய். அதோ, பார் மலேயாவை! சிங்கப்பூரை ஆளும் டேவிட் மார்ஷல், தமிழுக்கும் இடமளிக்கிறார், தனது ஆட்சியில். தமிழர்தம் உழைப்பும், அறிவும், தனது நாட்டுக்குக் கிடைக்கிறது எனும் உண்மையை அறிவதால், பல்கலைக் கழகத்தில் தனி இடம் தந்துள்ளார். ஆனால் நீ ஆட்சி புரியும் காலத்தில், எமது மொழியின் உருவையும் கருவையும் சிதைக்கும் திட்டங்களையே தீட்டுகிறாய்! அக்கிரமமல்லவா, இது?" என்று கேட்கவேண்டியவர், அவர். ஏனெனில், தமிழால் தகைமை பெற்றவர்! தமிழ்ப் பேராசிரியர் என்பதனாற்றான், அவரைப் பலர் அறிவர்!

ஆனால், அவருக்கு அது, கண்ணில் உறுத்தவில்லை — அழகு மயிலாளை எதிர்வீட்டுக்காரன் இழுத்துக்கொண்டு போய்ச் சித்திரவதை செய்வது கண்ணில்படுகிறது, ஆனால் கவனிக்க மறுக்கிறார். அதோடாவது, இருக்கிறாரா?

இல்லை! பாடை ஏறிய கிழவியைக் கொண்டுவந்து, கிண்ணாரம் கொட்டக் கிளம்புவீர் என்று அறிவுரை வேறு நவில்கிறார்!!

தந்தை சொத்தை தனயன் புறக்கணிப்பது போலாகுமாம்!

சம்ஸ்கிருதத்தைப் பிராமணரல்லாதரர் புறக்கணிப்பது, தந்தை சொத்தைத் தனயன் புறக்கணிப்பது போலாகுமாம்!

சைவ மடங்கள் எல்லாம், தமிழ், சமஸ்கிருதம் இரண்டையும் போற்றி வளர்த்தனவாம்.

இப்போதும் வளர்க்கின்றனவாம்—இனி மேலும் வளர்க்கும் என்பதில் ஐயமில்லையாம்.

ஒரு காலத்தில் இந்தியா முழுவதும், சமஸ்கிருதம் பொதுப் பாஷையாக இருந்ததாம்.

தமிழ்ப் பேராசிரியர்தான், இவ்வண்ணம் மொழிந்திருக்கிறார்!

அன்பர் மீனாட்சிக்கு ஏன்தான் இந்த ஆர்வம் எழும்பிற்றோ விளங்கவில்லை, நமக்கு! தந்தை சொத்து என்கிறார் வடமொழியை—தனயர்களே, உதாசீனம் செய்யாதீர் என உருகுகிறார்—உடனே, உரத்த குரலில் அறிவிக்கிறார் ஒரு காலத்தில் இந்தியா முழுவதுக்கும் பொதுப் பாஷையாக சமஸ்கிருதம் இருந்தது தெரியுமா, என்பதாக.

சிந்துநதிக் கரையில் திராவிடர் தம் மொழியும் கலையும் பரவிக்கிடந்தது என ஆதாரம் காட்டி உரைக்கும் அறிஞர் சிதம்பரனாரும் இருக்கிறார்! அகமும் புறமும் காட்டிடும் அழகுதமிழ் தவிர வேறெங்குமுண்டோ என்று பண்பாடும் டாக்டர் வரதராசனாரும் விளங்குகிறார்! சேரன் செங்குட்டுவன் ஆரியர் தம் தலையில் கல்லேற்றிய காதையினை அறியீரோ, என்கிறார் டாக்டர் ராஜமாணிக்கனார்! அவர்களுடன் சரிசமமாக அமரும் ஆற்றலும் வாய்ப்பும் பெற்ற இந்தத் தமிழ்ப் பேராசிரியர், சொல்லுகிறார், "சமஸ்கிருதம், இந்தியா முழுவதுக்கும் ஒருகாலத்தில் பொதுமொழியாக" இருந்ததாம்.

தமிழர்காள், கேண்மின்! தமிழைக் காக்கக் கல்லூரிகளில் பயிலும் மாணவத் தோழர்காள் அறிமின்! தமிழுக்காகப் பாடுபடும் நற்பேராசிரியர்களே, பண்டிதமணிகளே, நாவலர்களே, நல்லுள்ளம் கொண்ட ஆசிரிய அன்பர்காள், என்ன கூறுவீர் இவருடைய இந்தக் கூற்று கேட்டு? சம்ஸ்கிருதம்! பொது மொழியாக இருந்ததாம், ஆச்சாரியார், கூறுகிறார், இதனை—இந்திக்குப் பதில், சம்ஸ்கிருதத்தையே இந்தியாவின் பொது மொழியாக்க வேண்டும் என்று கூடப் புகல்கிறார். அவர், அப்படிக் கூறுவதன் பொருளும் புரிகிறது, காரணமும் விளங்குகிறது. ஆனால் தமிழராம் இந்த மீனாட்சிசுந்தரனார், எற்றுக்கு வக்கீலாகிறார் வடமொழிக்கு? இருந்ததாமே, இந்தியா முழுவதும் சமஸ்கிருதம்! இருந்துவிட்டுப் போகட்டும்—இவர், என்ன சமஸ்கிருதம் பேசி சமூக மேடையில் பேரும் புகழும் பெற்றவரா? தமிழால் வளர்ந்தவர்—தமிழால் வாழ்பவர்! ஆனால், தமிழைப்பற்றி அல்ல, பேசுவது — தமிழுக்கு வந்துற்ற கேடுகளைப்பற்றி அல்ல எண்ணுவது–வடமொழி குறித்து!

* * *

'இத்தனை நாள், கீதையும் இராமாயணமுமே பெரிய நூல்கள் என்றெண்ணிக்கிடந்தோமே, இப்போதல்லவா அறிகிறோம் அதனினும் அரியதோர் நீதி நூல் உளது–அது தமிழர்தம் மொழியில் உள்ளது எனும் உண்மையை, என்று அவர்களெல்லாம் அறியும்படி செய்யலாம். ஆற்றலும் இருக்கிறது, மீனாட்சிசுந்தரனாரிடம்! அகத்தையும் புறத்தையும், பத்துப் பாட்டையும், பதினெண் கீழ்க்கணக்கையும், சிந்தாமணியாம் சிலப்பதிகாரத்தையும், நந்தா விளக்காம் நான் மணிக்கடிகை, மணிமேகலையையும், இன்னோரன்ன எழில் தமிழ் காவியங்களைப் பிற மொழியில் பெயர்த்து உலகுக்கு அளிக்கலாம்! ஏனெனில் அவரைப் பன்மொழிப் புலவர் என்றும் அழைப்பதுண்டு பலர்! அந்த எண்ணம் அரும்பவில்லை, அன்பருக்கு. சேர சோழ பாண்டியர் தம் மாட்சியையும், களவியல் கற்பியல் காட்சிகளையும், வீரத் தாய்மாரின் வெண்சமர்ப்போர்ச் செய்திகளையும், 'முடி நடப்போனாரோ உன் கணவர்' என்று கேலிக்கு கேட்டவளைப் பார்த்து, 'ஆமாமடி! என் கணவர் முடி நடத்தான் போயிருக்கிறார். என்ன முடி தெரியுமோ? நீ, நினைப்பதுபோன்ற முடி அல்ல! அவர் பறித்து நடப்போனது தார் வேந்தர் தம் மணிமுடிகளை!" என்று செப்பிய மாதர்திலகங்களின் வீர உள்ளங்களையும், எடுத்தெடுத்து இயம்பலாம். அறிவார், அவர்—அதற்கான ஆற்றலும் இருக்கிறது. ஆனால், அவர் எதைப் பற்றி வியக்கிறார் தெரியுமோ?

நாம் எந்த நிலையில் நிற்போமோ இன்றைக்கு!

வடமொழியிலும், தமிழிலும் பேராற்றல் படைத்த பெரியோர்கள் இல்லாவிட்டால் நாம் எந்த நிலையில் இருப்போமோ இன்றைக்கு!

தமிழிலும், வடமொழியிலுமாம்!—அந்த விஷயத்தில் கூட அன்பருக்கு, தமிழுக்குத் தனியிடம் தர மனம் வரவில்லைபோலும். தமிழிலும், வடமொழியிலும் பேராற்றல் படைத்த பெரியோர்கள் இல்லாவிட்டால்......! என்று உருகுகிறார். வடமொழியில்பேராற்றல் படைத்த பெரியோர்களிருந்திருக்கலாம்—இருக்கட்டும். அவர்தம் மேதாவிலாசங்களை, மறுக்கவில்லை நாம். எண்ணத்தையள்ளும் எழிற் பெருங் காவியங்கள் தமிழில் இருக்கின்றன என்பதால் பிற மொழிகளில் எதுவுமே இல்லையென்று கூறும், குறைமதி கிடையாது நம்மிடம். கிரேக்கரிடமும், ரோமானியரிடமும், எகிப்து நாட்டிலும், ஆங்கில மொழியிலும், பிரெஞ்சிலும், எத்தனையோ இலக்கியங்கள் இல்லாமலில்லை — அது போல வடமொழியிலும் இருக்கிறது! காளிதாசன் இருக்கிறான்—வால்மீகி உள்ளான் — என்றாலும், அவர்களால் நாம் பயன்பெற்றோம் என்கிறாரே—அதுதான் விசித்திரமாக உள்ளது நமக்கு. விவேகி அவர்! வீணரல்ல!! எனினும், திருவாவடுதுறை மடத்தில், செப்பியிருக்கிறார் சிந்தையைக் கிளறும் இந்த வாசகங்களை.

தமிழ்மொழிப் பேராசிரியர் அவர்! வடமொழிக்கு வக்கீலாகிறார்!! இதே சமயத்தில், இதோ இன்னொருவர் வெளியிடுகிறார்,

"சமஸ்கிருதம் வளமிக்க மொழிதான். ஆனால் ஒருபோதும் அது பாமரர் மொழியாக இருந்ததில்லை."

"இந்தியாவின் கலாச்சாரத்துக்கும் இலக்கியத்துக்கும் பெரிதும் உதவிய பூபாகம் எது தெரியுமா? தென்னாடுதான்!"

டில்லி சர்க்காரின் உள்நாட்டுத் துணை அமைச்சராக இருக்கும் பி. என். தத்தார் என்பார் இவ்வண்ணம் தென்னாட்டின் பெருமை குறித்து டில்லியில் நடைபெற்ற விழாவொன்றில் வெளியிடுகிறார். தத்தார், கன்னடக்காரர்! அவர் புகழ்கிறார், தெற்கின் கலாச்சார இலக்கியப் பெருமையை!! தென்னாட்டின் பெருமையைப் பேசவேண்டிய மீனாட்சியார், வடமொழிக்கு வக்கீலாகிறார். இந்த விந்தைச் சுபாவம், ஏனதான் வளர்கிறதோ, மீனாட்சியார் போன்றோருக்கு!

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

பூரி ஜகன்னாதரிடமிருந்து குடியரசுத் தலைவருக்கு 'விசேஷ விருந்து' கிடைத்ததாம்! குடியரசு தினத்தன்று, அந்த விருந்தை வழங்க பல தாசிகள் போனார்களாம் டில்லிக்கு! திகைக்காதீர்கள்-நடன விருந்துதான்... தாசிகளை, அனுப்பியோர், கோயில் நிர்வாகிகள். அவர்களை மேலிடமும் சம்மதித்து அழைத்ததாம்! நேரு பண்டிதர், பெண்களின் உரிமைகள் குறித்து சங்கநாதம் செய்கிறார் — சமூக சேவகிகள், வழுக்கி விழுந்த வனிதைகளை மீட்பது குறித்து சங்கநாதம் செய்கிறார்கள். அப்படியொரு ஜாதி இருப்பதே அவமானம், என்று அலறுகிறார்கள்! ஆனால், பூரியில் இன்னும் தேவதாசிகள் உள்ளனர்— ஆடுவதும் பாடுவதும், அர்ச்சகர்களுக்கு வேட்டைப் பொருளாக விளங்குவதும், அவர்கள் தொழில். இந்த அக்கிரமத்துக்கு முடிவு கட்ட வேண்டியவர்களோ, அவர்களை அழைத்து, ரசிக்கிறார்கள்!!

* * *

வழுக்கி விழுந்த வனிதையர்களைப் பற்றி நினைக்கும்போது, ஜப்பான் தலைநகரமான டோக்யோவிலிருந்து அதிசயச் செய்தி ஒன்று கிடைக்கிறது. அங்குள்ள சர்க்கார் 'விபசாரத் தடை சட்டம்' ஒன்று கொண்டுவர முயற்சிக்கிறார்களாம். இதுகூடாது! விபச்சாரம் செய்வோம்!—என்று அதை எதிர்த்து 15,000 அந்தி நேரத்து அழகிகள், ஒரு தொழிற்சங்கம் அமைத்து இருக்கிறார்களாம். அதன் மூலம், தங்கள் உரிமையை நிலைநாட்டப் போராடப் போகிறார்களாம்! போராட்டம் எப்படியிருக்கும் என்பது பற்றிய தகவல் இல்லை. ஆனால், அந்த போராட்டத்துக்கு நாங்கள் ஆதரவு தருவோம் என்று முன்வந்திருக்கிறார் ஜப்பான் பார்லிமெண்டு மெம்பர் ஒருவர்! அவர், ஒரு சோஷியலிஸ்டாம்!

* * *

லக்னோவில், சர்க்காருக்கு, அண்மையில் ஒரு பெரிய தலைவலி வந்துவிட்டது. நேருவின் சொந்த இடமான ஐக்கிய மாகாணத்து சர்க்காருக்குத்தான்! யாரோ ஒரு நேபாளி, உள்ளூர் பத்திரிகையொன்றில் ஒரு விளம்பரம் கொடுத்தானாம். அதில் தன்னுடைய நாய் காணாமற் போய்விட்டதென்றும் அதன் பெயர் முகம்மது என்றும் விளம்பரம் செய்திருக்கிறான்! நேபாளி, அந்த விளம்பரத்தை வேண்டுமென்றே, குறும்புக்காகக் கொடுத்திருக்கிறான் என்பதை அங்குள்ள முஸ்லீம்கள் அறிந்திருக்கிறார்கள். அதனால், அவர்களுக்குக் கோபம் வந்து, வகுப்புக் கலவரம் மூள்கிற அளவுக்குப்போய்விட்டது! முஸ்லீம்களின் வழிகாட்டியல்லவா முகம்மது. எப்படியிருக்கிறது, இந்துமத வெறியனின் வேலை?

* * *

இந்து மதத்தின் பெருமையைப் பற்றி வானளாவப் பேசத் தவறுவதில்லை உயர் பதவி வகிக்கும் சாஸ்திரிகளும், சர்மாக்களும்! அந்த இந்துமதக் கடவுளாம் காளிக்கு, மனிதர்களைக் கொண்டுபோய் பலி இடும், கொடிய பூசாரிகளிருவரை கல்கத்தா போலீசார் கைது செய்திருக்கிறார்கள் அண்மையில். அவர்கள், அது தமது கொள்கை என்கிறார்கள். சாஸ்திரிகளும் சர்மாக்களும் பேசுவதைக் கேளுங்கள், "அகிம்சையே அவசியம், அதுதான் காந்தியின் வாக்கு" என்று உள்ளம் நெக்குருக உரைப்பார்கள். ஆனால், அவர்கள் வாதாடும் மதம்தான், தங்களை நரபலிகொடுக்கச் சொல்லுகிறது என்கிறார்கள், கல்கத்தா பூஜாரிகள்!

* * *

'அன்பே சிவம்' என்று சொல்லும் சைவ மதத்தின் பெருமைகளை விளக்க திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், மாநாடொன்று கூட்டி பலரை அழைத்துப் பேசச் செய்தாராம். அவரவரும் தத்தமது கருத்துக்களை அள்ளியிறைத்துவிட்டுப்போயிருக்கிறார்கள்! அதை ஏடுகளில்படித்த நமது அலுவலகச் சிறுவன் கேட்கிறான், "ஏன் சார் அந்த மாநாட்டில் யாராவது' பிள்ளைக்கறி சமைத்த சிறுத்தொண்டரைப்பற்றிப் பேசினார்களா?', என்பதாக. குறும்புக்காரப் பயல்!

* * *

குறும்பு செய்வதிலும்கூட, புத்திசாலித்தனம் இருக்கவேண்டும். இல்லையென்றால், இப்படிக் கடிதம் தீட்டுவாரா, 'இந்து' பத்திரிகையிலொருவர்! வரப்போகும் புத்தர் பிறந்த 2500-வது ஆண்டுவிழாவையொட்டி, புத்தகயாவில் மாபெரும் விழா நடக்கப்போகிறது. அதற்காக, கயாவிலுள்ள கோயிலைப் புதுப்பிப்பதற்காக டில்லி சர்க்கார் ரூ 30-லட்சம் வழங்க முன்வந்திருக்கிறார்கள். அதைக் கேட்ட, நமது 'மயிலை'வாசியொருவருக்கு மன எரிச்சல் தாங்க முடியவில்லை! 'இந்து'வில் கடிதம் தீட்டியிருக்கிறார். "ஏ! சர்க்காரே! இது நியாயமா? புத்த மதக்காரர்களுக்குப் பணம் கொடுக்கலாமா?" என்று ஆத்திரத்தோடு அல்ல. அதுதானே, அந்த இடத்துச் சூட்சமம்.. வெகு சாதுர்யமாகச் சொல்லுகிறார், "புத்தமதம் ஏது, இந்தியாவில்? அப்படியிருக்கும்போது 30 லட்சம் அளிக்கிறார்களே! அந்த மதத்தைவிட, இந்துமதம் எவ்வளவு பெரியது. இதைச் சேர்ந்த எவ்வளவு கோயில்கள் பாழாகின்றன. அதற்கெல்லாம் பணம் கொடுக்கவேண்டும்..." என்பதாக. அதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. முதல் தவணையாக, குடந்தையில் நடக்க இருக்கும் மகாமகத்துக்கு 'ஏதாவது' வருமா, என்றும் கேட்கிறார்!!

★

வியார் பிலிம்ஸ் லிமிடெட், தியாகராயநகர். மதராஸ் — 17.